Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 6 பக்கம் | சனிக்கிழமை, நவம்பர் 18, 2023 | இதழ் 127

# மசோதாக்களுக்கு ஒப்புதல் தராதது சட்ட விரோதம் சட்டமன்றத்தை கவர்னர் அவமதிக்கிறார் தமிழக வளர்ச்சி திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுகிறார் கவர்னர் பதவி அகற்றப்பட வேண்டியது: ஸ்டாலின் பேச்சு



*சென்னை 18 நவம்பர் 2023:* கவர்னர் பதவி அகற்றப்பட வேண்டிய பதவி; இருந்தாலும் அது இருக்கும் வரை மக்களாட்சி தத்துவத்துக்கு அடங்கி இருக்க வேண்டியது தான் மரபு என்று சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

சட்டசபை நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களுக்கு ஒப்புதல் தராதது சட்ட விரோதம்; சட்டமன்ற இறையான்மைக்கு எதிரானது என்று கவர்னர் மீது முதலமைச்சர் கடுமையாக குற்றஞ்சாட்டினார்.

கவர்னராக இருப்பவர், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்க வேண்டும்; ஆனால் அரசின் திட்டங்களுக்கு எவ்வாறு முட்டுக்கட்டை போடலாம் என நாள்தோறும் யோசித்து செயல்படுகிறார் என்றும் ஸ்டாலின் கூறினார்.

தமிழக கவர்னர் திருப்பி அனுப்பிய 10 சட்ட மசோதாக்களை மீண்டும் சட்டசபையில் நிறைவேற்றி கவர்னருக்கு அனுப்புவதற்காக தமிழக சட்டசபையில் சிறப்பு கூட்டம் இன்று நடந்தது. காலை 10 மணிக்கு சட்டசபை கூடியது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கவர்னரால் திருப்பி அனுப்பப்பெற்ற சட்டமுன்வடிவுகளை மீண்டும் சட்டப்பேரவையில் மறுஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித்தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார். அவர் பேசியதாவது:

“மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை” என்றார் புரட்சியாளர் மா சே துங். காய்ச்சல், தொண்டை வலி காரணமாக சில நாட்கள் வீட்டில் நான் ஓய்வெடுத்து வந்தாலும், எனது உடல்நலனைவிட இந்த மாநிலத்து மக்கள் நலன் - தாய்த்தமிழ் நாட்டின் நலன், நூற்றாண்டு கண்ட இந்த சட்டப்பேரவை நலன் தான் அதைவிட முக்கியம் என்ற மன உறுதியோடு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் நம்மை, இந்திய அரசியல் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் மையமாக இருந்து சட்டமியற்றும் இந்த சட்டமன்றத்தை தடுக்கும் சக்தி ஒன்று முளைக்குமானால், இந்தச் சூழ்நிலை என்பது இந்திய ஜனநாயகத்தை மிக மோசமான வகையில் கொண்டு செலுத்திவிடும் என்ற அச்சத்துடன் தான் உங்கள் முன்னால் நிற்கிறேன். இந்தியாவில் மக்களாட்சி மாண்பை உருவாக்கும் சட்டமன்றமாக முதன்முதலாக எழுந்த சட்டமன்றம் நமது தமிழ்நாட்டு சட்டமன்றம்.

இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களுக்கும் தலையாய மாநிலம் தமிழ்நாடு என்று சொல்லத் தக்க வகையில் சிறப்பான மக்கள் நலத்திட்டங்களை உருவாக்கி மாநிலத்தை வளர்த்தெடுத்து இருக்கிறோம்.

இன்று நாம் காணும் வளர்ச்சி என்பது நமது தலைவர்களால், அவர்கள் உருவாக்கிக் கொடுத்த சட்டங்களால் - திட்டங்களால் வந்தவை ஆகும்.

# டேட்டா திருட்டு-ல் ஈடுபட்ட தனியார் நிறுவன ஊழியர்கள் கைது



*சென்னை 18 நவம்பர் 2023:* சென்னை திருவல்லிக்கேணியை சேர்ந்த புகார்தாரர் தனியார் மென்பொருள் நிறுவனத்தில் நிதி மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும், தங்களுடைய நிறுவனத்தில் அமேசான் வெப் சர்வீஸ் மூலம் கிளவ் கம்யூட்டிங் மென்பொருட்களை வங்கி நிறுவனங்களுக்கு தயாரித்து கொடுக்கும் பணியை மேற்கொள்கிறது என்றும் தங்களுடைய சில வாடிக்கையாளர்களின் ஏ.டபிள்யூ.எஸ் அக்கவுண்ட் அங்கீகரிக்கப்படாத மற்றும் மோசடியான முறையில் ஹாக்கிங் செய்யப்பட்டது. இக்குற்ற செயலில் ஈடுபட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுத்து தங்கள் நிறுவனத்தில் வாடிக்கையாளர்களில் ஏ.டபிள்யூ.எஸ் அக்கவுண்ட்- யை மீட்டு தரும்படியும் புகாரளித்தார். இப்புகார் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள மத்திய குற்றப்பிரிவு, சைபர் கிரைம் பிரிவில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

சைபர் கிரைம் பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணையில், மோசடி செய்தவரின் ஐபி முகவரி கிடைத்துள்ளது. சிஏஎப் மூலம் பெறப்பட்ட தகவலின் எடிசன் ஆ/வ/29, த/பெ. ரமேஷ் என்பவர் மேற்படி மோசடியில் ஈடுபட்டுள்ளதும், அவர் புகார்தாரரின் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த ஊழியர் என்பதும் தெரிய வந்தது. அதன்பேரில் மேற்படி மோசடியில் ஈடுபட்ட 1.எடிசன் ஆ/வ.29, த/பெ.ரமேஷ், காந்த டைமண்ட்ஸ், 8வது குறுக்குத் தெரு, 1-வது பிரதான சாலை, கசூரா கார்டன், நீலாங்கரை, சென்னை. 2. ராம்குமார், ஆ/வ.29, த/பெ. சந்திரசேகரன், காந்த டைமண்ட்ஸ், 8வது குறுக்குத் தெரு, 1-வது பிரதான சாலை, கசூரா கார்டன், நீலாங்கரை, சென்னை. 3. காவ்யா வசந்தகிருஷ்ணன், பெ/வ.29, த/பெ. வசந்தகிருஷ்ணன், எப்-2 ஆண்டாள் இல்லம், சுரேந்திரா நகர் 5வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை. ஏ5.ரவிதா தேவசேனாபதி, பெ/வ.40, கோத்ரேஜ் வூட்ஸ்மேன் எஸ்டேட், பெல்லாரி ரோடு, பெங்களூர் வடக்கு, கர்நாடகா, ஏ 6 கே.கருப்பையா ஆ/வ.26, த/பெ.கருப்பையா, 1/65 நரிக்குடி, ஆவுடையார் கோவில் (தபால்) புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய நபர்களை 25.10.2023 அன்று கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 7 லேப்டாப், 1 ஐபேட் மற்றும் 4 செல்போன்கள் கைப்பற்றப்பட்டது.

எதிரிகள் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

நிறுவனங்கள் டேட்டா ஹாக்கிங், தொடர்பாக விழிப்புணர்வுடன் இருக்குமாறு அது தொடர்பான புகாருக்கு சைபர் கிரைம் சேவை எண்.1930 தொடர்பு கொள்ளவும் அல்லது இது தொடர்பான புகாரை பதிவு செய்ய தேசிய சைபர் கிரைம் ரிபோடிங் போர்டல் www.cybercrime.gov.in – ல் பதிவு செய்யவும் என சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.




இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# நயன்தாராவிற்கு 39 வயதாகிறது: ஐ.எம்.டி.பியில் அதிக தரமதிப்பீடு பெற்ற இந்த இளமையான நடிகையின் 12 படங்கள் இதோ

*சென்னை 18 நவம்பர் 2023:* நயன்தாரா அவர்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்பு சத்யன் அந்திகாட் அவர்கள் இயக்கிய மனசினக்கரே திரைப்படத்தில் ஜெயராம் மற்றும் ஷீலா ஆகியோருடன் இணைந்து நடித்ததன் மூலமாக தனது நடிப்பு பயணத்தை துவங்கினார். கடந்த பல ஆண்டுகளாக கஜினி, சந்திரமுகி, ராப்பகல், ஜவான், நானும் ரௌடிதான், மற்றும் அறம் போன்ற திரைப்படங்களிலும் இன்னும் இதர பல்வேறு திரைப்படங்களிலும் அவரது சிறந்த நடிப்புத் திறனை நாம் காண முடியும். நயன்தாரா அவர்களை அன்னபூரணி: தி காடஸ் ஆஃப் ஃபுட் என்ற திரைப்படத்தில் நாம் காணலாம், அதில் அவர் சத்தியராஜ் மற்றும் கே.எஸ்.ரவிக்குமார் ஆகியோருடன் நடிக்கிறார். ஐ.எம்.டி.பியில் நயன்தாரா அவர்களின் அதிக தரமதிப்பீடு பெற்ற சிறந்த திரைப்படங்கள் இதோ

*1. தனி ஒருவன் - 8.4, 2. சூப்பர் - 8.1, 3. அறம் - 7.7, 4. ராஜா ராணி - 7.6, 5. கஜினி - 7.5, 6. மாயா - 7.5, 7. சிவாஜி - 7.5, 8. மனசினக்கரே - 7.5, 9. யாரடி நீ மோகினி - 7.3, 10. இமைக்காத நொடிகள் - 7.3, 11. கோலமாவு கோகிலா - 7.3, 12. பில்லா - 7.3.*




# டாடா ஆட்டோகாம்ப் மற்றும் ஃபோர்டகோ குழுமம் ஆகியவை அதிநவீன கேபின் வசதியை அறிமுகப்படுத்துகின்றன



*சென்னை 18 நவம்பர் 2023:* ஒரு முன்னணி வாகனக் கூறு கூட்டு நிறுவனமான டாடா ஆட்டோகாம்ப், டிராக்டர்கள் மற்றும் ஆஃப்-ஹைவே உபகரணங்களுக்கான அதிநவீன கேபின்களுக்கான அதன் உற்பத்தி தொழிற்சாலை வசதியின் தொடக்கத்தை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது. இந்த கேபின்கள் ஃபோர்டகோ (உலகளவில் புகழ்பெற்ற வடிவமைப்பு பொறியியல் மற்றும் உற்பத்தி தீர்வுகள் வழங்குநர் மற்றும் ஹெவி ஆஃப் ஹைவே உபகரணங்களுக்கான முன்னணி ஐரோப்பிய மூலோபாய பங்குதாரர்) உடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளன. இந்த புதிய வசதி, டிராக்டர்களுக்கான பாதுகாப்பான, மேம்பட்ட மற்றும் புதுமையான கேபின் தீர்வுகளை வழங்குவதன் மூலம் விவசாயத் தொழிலில் புரட்சியை ஏற்படுத்துவதை உறுதியளிக்கிறது.

இந்த தொடக்க விழா நவம்பர் 07, 2023 அன்று புனே இல் சாக்கன் இல் உள்ள டாடா ஆட்டோகாம்ப் இன் காம்போசிட் டிவிஷன் மெனுஃபேக்சரிங் ஃபெசிலிட்டி இல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் டாடா ஆட்டோகாம்ப் மற்றும் ஃபோர்டகோ இன் பிரதிநிதிகள் மற்றும் முக்கிய வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

டிராக்டர்கள் மற்றும் ஆஃப்-ஹைவே பிரிவுக்கான டாடா ஆட்டோகாம்ப் இன் புதிய கேபின் வசதியானது, அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பை உள்ளடக்கி, விவசாயிகளுக்கு வசதியான, பாதுகாப்பான மற்றும் பணிச்சூழலியல் கேபின்களை வழங்குகிறது. இந்த மேம்பட்ட கேபின் வசதிக்கான வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தை ஃபோர்டகோ வழங்கும். இந்த நிகழ்ச்சியில் பேசிய டாடா ஆட்டோகாம்ப் இன் தலைவர் அரவிந்த் கோயல், "டாடா ஆட்டோகாம்ப் தனது வாடிக்கையாளர்களுக்கு அதிநவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதில் எப்போதும் ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது. இந்த ஆஃப்-ஹைவே வாகன சந்தை இந்தியாவில் வேகமாக வளர்ந்து வருகிறது, மேலும் பாதுகாப்பு மற்றும் வசதிக்கான தேவை பயனர்களிடையே அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. ஃபோர்டகோ உடனான வலுவான வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன், இந்த புதிய கேபின் வசதி, டிராக்டர் மற்றும் ஆஃப்-ஹைவே தொழில்துறைக்கு பாதுகாப்பான, சௌகரியமான கேபின்களை வழங்கும், இதன் மூலம் இந்தியா மற்றும் உலகளாவிய சந்தைகளில் இந்த பிரிவுகளில் எங்கள் இருப்பை வலுப்படுத்தும்." என்று கூறினார். பாதுகாப்பு கேபின் உற்பத்தியானது, ஃபோர்டகோ நிறுவனத்தின் தொழில்நுட்பம், வடிவமைப்பு மற்றும் தரவரைவுகளின் அடிப்படையில் டாடா ஆட்டோகாம்ப் ஆல் செய்யப்படுகிறது. இந்த கூட்டுழைப்பானது, பாதுகாப்பான மற்றும் நம்பகமான கேபின்களுக்கான டிராக்டர் மற்றும் ஆஃப்-ஹைவே ஓ ஈ எம்-களை ஆதரிக்கிறது. டாடா ஆட்டோகாம்ப் மற்றும் ஃபோர்டகோ ஆகியவை முக்கிய டிராக்டர் மற்றும் ஆஃப்-ஹைவே ஓ ஈ எம்-களுக்கு, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் விற்கப்படும் அவர்களின் டிராக்டர்களில் பொருத்தப்படும் கேபின்களை வழங்கும். இதேபோன்ற குறிப்பில், ஃபோர்டகோ குழுமத்தின் தலைவரும் தலைமை செயல் அதிகாரியுமான லார்ஸ் ஹெல்பெர்க், "டாடா ஆட்டோகாம்ப் உடனான எங்கள் ஒத்துழைப்பு, தொழில்துறையில் ஒரு புதிய தரநிலைகளை அமைக்கும் ஒரு கேபின் வசதியை உருவாக்க எங்கள் தொழில்நுட்ப திறன்களைப் பயன்படுத்த அனுமதித்துள்ளது. புதுமை, தரம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றை வலியுறுத்தும் இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் குழுக்களுக்கு இடையேயான இந்த ஒத்துழைப்பு பலனளித்துவருகிறது, மேலும் இந்த கேபின்கள் பொருத்தப்பட்ட டிராக்டர்கள் விவசாய சமூகத்தில் ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் உறுதியாக உள்ளோம்." என்று கூறினார். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த கேபின் வசதி, விவசாயத் துறையின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வகையில், டாடா ஆட்டோகாம்ப் மற்றும் ஃபோர்டகோ இன் நோக்கத்துடன் இணைகிறது. அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பை ஒருங்கிணைப்பதன் மூலம், விவசாயிகளை மேம்படுத்துவதையும், விவசாயத் தொழிலின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிப்பதையும் இந்த நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

Cements
Bulker / Bags
ALL Major Brands available
We Shall supply Cements with most competitive pricing
Rtn Dr R Sathyanarayanan
Senior Consultant
SRMPR Cements
Call or Whatsapp @ 8148231942

# பிரபல பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மருத்துவ நிபுணர் குறைப்பிரசவ நிகழ்வுகளில் "ஓரல் மோட்டார் இன்டர்வென்ஷன்" (ஓஎம்ஐ) நுட்பங்களின் அவசியத்தை எடுத்துக்காட்டும் முக்கிய ஆய்வை வெளியிட்டுள்ளார்!



*சென்னை 18 நவம்பர் 2023:* குறைப்பிரசவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு நடைமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கும் வகையிலும், சூரியா மருத்துவமனையின் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவுத் (என்ஐசியு) தலைவர் டாக்டர் தீபா ஹரிஹரன் முக்கிய ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளார். உலக குறைப்பிரசவ தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், குறைப் பிரசவத்தை எதிர்கொண்டு வெற்றி பெற்றவர்களின் அனுபவங்கள் பகிரப்பட்டன. அத்துடன் சிறிய செயல்கள், பெரிய தாக்கம் என்று பொருள்படும் 'ஸ்மால் ஆக்□ஷன்ஸ், பிக் இம்பாக்ட்' என்ற புத்தகமும் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியின்போது, பிரபல ஸ்குவாஷ் விளையாட்டு வீராங்கனை தீபிகா பல்லிக்கல் கார்த்திக்கும் தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

குறைப் பிரசவ பச்சிளங்குழந்தை பராமரிப்பு நடைமுறைகள் குறித்து இந்த ஆய்வில் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. 'என்ஐசியு-வில் ஓரல் மோட்டார் இன்டர்வென்ஷன்: என்ஐசியு-வில் மூளை மற்றும் பேச்சு பயிற்சிகள் நேர்மறை விளைவுகளை மேம்படுத்துகின்றன' என்ற ஆய்வு அறிக்கையை இந்த ஆண்டின் தொடக்கத்தில் வியன்னாவில் நடந்த மதிப்புமிக்க ஐரோப்பிய குழந்தைகள் காஸ்ட்ரோஎன்டாலஜி சங்கத்தின் வருடாந்திர கூட்டத்தில் டாக்டர் தீபா முன்வைத்தார். பேச்சு மற்றும் மூளை வளர்ச்சிக்காக வாய் மற்றும் உதடுகளை மசாஜ் செய்தல் மற்றும் சான்றளிக்கப்பட்ட, திறன் வாய்ந்த பேச்சு சிகிச்சையாளர்களின் பிற நடைமுறைகள் போன்ற வாய்வழி (ஓ.எம்.ஐ - ) நுட்பங்களின் நன்மைகள் குறித்து இந்த ஆய்வு விரிவாக எடுத்துரைக்கிறது. ஆரம்பத்திலேயே ஓ எம் ஐ நடைமுறைகளைப் பின்பற்றுவதால் நாசோகாஸ்ட்ரிக் குழாய்களைச் சார்ந்திருப்பது குறைப்பதாகவும், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு சிறப்பாக உணவளிக்க முடிவதாகவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைப் பிரசவ நிகழ்வுகளில் ஓஎம்ஐ பின்பற்றப்படும்போது, மருத்துவமனையில் தங்கும் நாட்கள் குறைவதாவும் கண்டறியப்பட்டுள்ளது. தாய்ப்பாலுடன் இணைந்து ஓஎம்ஐ-யைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முதல் ஆய்வு, புதிதாகப் பிறந்த குழந்தையின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான எளிய மற்றும் செலவு குறைந்த நடவடிக்கையாக ஓ எம் ஐ - யைப் பரிந்துரைக்கிறது.

இந்தியாவில் பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிசு இறப்புக்கு குறைப் பிரசவமே முக்கிய காரணமாகும். இந்தியாவில் ஆண்டுக்கு 35,00,000 குழந்தைகள் குறைப் பிரசவத்தில் பிறக்கின்றன. தாய்வழி நீரிழிவு பிரச்சினை, உயர் இரத்த அழுத்தம், மன அழுத்தம், நோய்த்தொற்று மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவற்றுடன் பிரசவத்திற்கு முந்தைய பராமரிப்பு போதிய அளவு இல்லாததும் குறைப்பிரசவத்திற்குக் காரணமாகின்றன. குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு சுவாச சிகிச்சை, அன்டிபயாடிக்ஸ், ஒளிக்கதிர் சிகிச்சை, ஊட்டச்சத்து மற்றும் இதய ஆதரவு உள்ளிட்ட பல்வேறு அளவிலான தீவிர சிகிச்சை தேவைப்படுகிறது. வரும் ஆண்டுகளில் குறைப்பிரசவமும் தொற்றா நோயாக மாறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், ஸ்டீராய்ட்களின் சரியான பயன்பாடு, சரியான நேரத்தில் சிகிச்சை மற்றும் மேம்பட்ட பச்சிளங்குழந்தை தீவிர சிகிச்சை போன்ற எளிய நடைமுறைகள் மூலம் நேர்மறையான விளைவுகளை மேம்படுத்தலாம்.

சூரியா மருத்துவமனையின் மூத்த பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு மருத்துவ நிபுணர் (நியோனாட்டாலஜிஸ்ட்) டாக்டர் தீபா ஹரிஹரன் கூறுகையில், "பச்சிளங் குழந்தைகளின் தீவிர சிகிச்சையில் முக்கிய அம்சங்களைப் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கைக்குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய வகையினர் ஆவார்கள். ஓஎம்ஐ நுட்பங்கள் மற்றும் அதன் மூலம் மருத்துவ விளைவுகளை மேம்படுத்துவது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதாக நாங்கள் உணர்ந்ததால் நானும் எனது குழுவும் இந்த தீவிரமான ஆய்வைத் தொடங்கினோம். சுகாதார வல்லுநர்களாகிய நாங்களும் புள்ளி விவரங்களால் அச்சமடைந்துள்ளோம். விழிப்புணர்வு இல்லாமை மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக 10 சதவீத குழந்தைகளுக்கு மட்டுமே ஆரம்பகால ஓஎம்ஐ கிடைக்கிறது. இந்தியாவில் 5 குழந்தைகளில் ஒன்று குறைப்பிரசவத்தில் பிறக்கிறது. இத்தகைய சூழ்நிலையில், பிறந்த முதல் ஒரு மணி நேரத்தில் அதிநவீன பராமரிப்பு நடைமுறைகள் தேவை. அது குறித்த விழிப்புணர்வு முக்கியம்" என்றார்.

முன்கூட்டியே பிறக்கும் குறைப் பிரசவ குழந்தைகளுக்கான இந்திய அறக்கட்டளை நடத்திய ஒரு ஆய்வில், ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2150 கர்ப்பிணிப் பெண்களில், 22 சதவீதம் பேர் மட்டுமே குறைப்பிரசவத்தின் அபாயத்தைப் பற்றி அறிந்துள்ளனர் என்பது தெரியவந்தது. முன்கூட்டியே பிறக்கும் குறைப் பிரசவக் குழந்தைகளைப் பெற்றெடுத்த 1020 பெண்களில், 17 சதவீதம் பேர் மட்டுமே என்ஐசியு எனப்படும் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் வசதிகளைப் பெற்றிருந்தனர் என்பது தெரியவந்தது. என்ஐசியு வசதிகள், பிரசவத்தின் போது தாய் மற்றும் குழந்தையைப் பிரித்தல், போக்குவரத்து, நிதி மற்றும் வேலையில் நீண்ட விடுப்பு போன்றவை இந்த வசதிகளில் அடங்கும். இது போன்ற நிகழ்வுகளில் மூன்றில் ஒரு பங்கில், குழந்தை, குறைப்பிரசவத்தில் பிறந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்காக அந்த முதல் முக்கிய நேரம் செலவிடப்பட்டது.

குறைப்பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகள் வாய் வழியே தங்களுக்கான உணவை எடுத்துகொள்ளுவது தாமதமாவது நீண்ட காலம் என்.ஐ.சி.யு- பிரிவில் இருப்பதற்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறது. மேலும், மருத்துவமனை சூழல் மூலம் உண்டாகும் தொற்று, ஊட்டச்சத்து குறைப்பாடு உள்ளிட்ட வியாதிகளுக்கும் வழிவகுக்கிறது. இந்த காரணிகள் குறைப்பிரசவ குழந்தைகளிடம் நீண்ட கால தாக்கத்தை உருவாக்குகின்றன. அதனால் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது உடனடியாக கவனத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான அம்சமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

# எலும்பு மஜ்ஜை மாற்றுப்பதியம் மற்றும் புற்றுநோய்க்கான கதிர்வீச்சியலுக்கு சிறப்பு பிரிவுகளை தொடங்கும் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட்



சென்னை 18 நவம்பர் 2023: பிரபல மருத்துவமனை குழுமமான எம்ஜிஎம் ஹெல்த்கேர் - ன் ஒரு அங்கமான எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட், எலும்பு மஜ்ஜை மாற்றுப்பதியம் மற்றும் புற்றுநோய்க்கான கதிர்வீச்சியல் என்ற இரு சிறப்பு பிரிவுகளை இன்று தொடங்கியிருக்கிறது. ஸ்ரீலங்காவின் கோத்தலவாலா டிஃபென்ஸ் யுனிவர்சிட்டியின் செயலாக்க இயக்குனர் மற்றும் முதுநிலை புற்றுநோயியல் நிபுணர் பேராசிரியர் டாக்டர். ஜெயந்த பாலவர்த்தனே இந்த இரு சிறப்பு பிரிவுகளையும் தொடங்கி வைத்தார். இத்தொடக்க விழா நிகழ்வில் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட் - ன் புற்றுநோயியல் சேவைகள் துறையின் இயக்குனர் மற்றும் மருத்துவ புற்றுநோயியல் பிரிவின் முதுநிலை நிபுணர் டாக்டர். எம்.எ. ராஜா மற்றும் எம்ஜிஎம் ஹெல்த்கேர் - ன் தலைமை செயலாக்க அதிகாரி ஹரீஷ் மணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதிதாக தொடங்கப்பட்டிருக்கும் எலும்புமஜ்ஜை மாற்றுப்பதிய பிரிவு, புற்றுநோய்க்கான சிகிச்சையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை குறிக்கிறது. லுகேமியா (இரத்தப் புற்றுநோய்), நிணநீர் சுரப்பி புற்றுநோய் மற்றும் மரபியல் கோளாறுகள் போன்ற இரத்தவியல் கோளாறுகளால் அவதிப்படும் நோயாளிகளுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் பிஎம்டி சிகிச்சையில் சேதமடைந்த அல்லது நோய்த்தாக்கம் உள்ள மஜ்ஜையை அகற்றிவிட்டு, ஆரோக்கியமான எலும்புமஜ்ஜை செல்கள் அல்லது ஸ்டெம் / உயிரணு செல்களை மாற்றுப்பதியம் செய்யப்படுகிறது. நோயெதிர்ப்பு செயல்பாட்டிற்கு அத்தியாவசியமான, ஆரோக்கியமான இரத்த அணுக்களை உற்பத்தி செய்வதற்கு உடலின் திறனை மீண்டும் நிலைநாட்டுவதன் வழியாக புற்றுநோயை குணப்படுத்த அல்லது அதன் தீவிரத்தை தணிக்க இந்த எலும்புமஜ்ஜை மாற்றுப்பதிய செயல்முறை வழிவகுக்கிறது. பி எம் டி பிரிவில் இரத்தப் புற்றுநோயியல் நிபுணர்கள் மற்றும் மருத்துவ புற்றுநோயியல் வல்லுனர்கள் உட்பட, மருத்துவர்களின் பிரத்யேக குழுவிற்கு மிக நவீன தொழில்நுட்பமும், மேம்பட்ட மருத்துவ சாதனங்களும் பல்வேறு இரத்த கோளாறுகளுக்கு பயனளிக்கும் சிகிச்சையை வழங்க ஆதரவளிக்கின்றன. இம்மருத்துவ குழுவின் ஒட்டுமொத்த நிபுணத்துவம், தனிச்சிறப்பான சிகிச்சை நோயாளிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்கிறது; அத்துடன் அவர்களின் நலவாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் கவனத்தில் கொள்கின்ற ஒரு விரிவான பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த அணுகுமுறையினாலும் அவர்கள் பயனடைகின்றனர். மிக நவீன நேரியல் முடுக்கியை (லைனியர் அக்சிலரேட்டர்) உள்ளடக்கிய புற்றுநோய்க்கான கதிர்வீச்சியல் பிரிவு, 3டி சி ஆர் டி, ஐ எம் ஆர் டி, ஐ ஜி ஆர் டி, ஆர் ஜி ஆர் டி, வி எம் ஏ டி எஸ் ஆர் டி, எஸ் ஆர் டி எஸ் ஆர் எஸ், எஸ் ஆர் எஸ் எஸ் பி ஆர் டி, எஸ் பி ஆர் டி மற்றும் ஐ ஜி பி டி போன்ற மேம்பட்ட கதிரியக்க சிகிச்சைகளை வழங்குகிறது. மிகத்துல்லியமான இச்சிகிச்சைகள், ஆரோக்கியமான திசுக்கள் மீது பாதிப்புகளை மிகவும் குறைப்பதோடு, குணமாக்கும் சிகிச்சையின் தாக்கத்தை அதிகமாக்குகின்றன. இரு சிறப்பு பிரிவுகளை தொடங்கியிருப்பதற்காக எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட் - ஐ வாழ்த்தி பாராட்டிய பேராசிரியர் டாக்டர். ஜெயந்த பாலவர்த்தனே, "புற்றுநோயாளிகளுக்கு விரிவான முழுமையான சிகிச்சை பராமரிப்பை வழங்குவதில் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட், மிக பிரமாதமான பணியை ஆற்றி வருகிறது. புற்றுநோய்க்கான சிகிச்சையை தொடங்குவதற்கு முன்பு நோயாளிகளின் மனங்களில் "புற்றுநோய் மீதான அச்சத்தை" வெல்வதிலிருந்து இங்கு சிகிச்சை செயல்முறை தொடங்குவது பாராட்டுக்குரியது. நம்பிக்கையையும், குணமாக்கலையும் பேணி வளர்க்கின்ற ஒரு சூழலை உறுதிசெய்ய மருத்துவ சிகிச்சை நேர்த்தி என்பதையும் கடந்து, இந்த பொறுப்புறுதி நீள்கிறது. பி எம் டி மற்றும் புற்றுநோய்க்கான கதிர்வீச்சியல் பிரிவுகளின் தொடக்க விழாவிற்கு எம்மை அழைத்து பங்கேற்க செய்திருப்பதற்காக எம்ஜிஎம் ஹெல்த் கேர் - ன் நிர்வாகத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். புற்றுநோயாளிகளுக்கு சிறந்த, சௌகரியமான சிகிச்சை அனுபவத்தை வழங்குவது என்ற இலக்கை நோக்கிய எம்ஜிஎம் - ன் பயணத்தில் சிறப்பான வெற்றியைக்காண நான் அவர்களை வாழ்த்துகிறேன்." என்று கூறினார். பி எம் டி பிரிவு மற்றும் புற்றுநோய்க்கான கதிர்வீச்சியல் பிரிவில் தனித்துவமான அம்சங்களை விளக்கி டாக்டர். எம்.ஏ. ராஜா பேசியபோது, "மிக உயர்ந்த தரநிலைகளில் சிகிச்சையை வழங்குவதில் எமது அர்ப்பணிப்பு தொடர்ந்து நிலையானதாகவும், வலுவானதாகவும் நீடிக்கிறது. இக்குறிக்கோள் மீதான எமது தளராத உறுதிக்கு இந்த இரு புதிய பிரிவுகளை உள்ளடக்கிய இவ்வளாகம், ஒரு சிறந்த சாட்சியமாக திகழ்கிறது. திறன்மிக்க நிபுணர்களின் குழு மற்றும் மிக நவீன தொழில்நுட்பம் ஆகியவற்றால் நோயாளிகளுக்கு கிடைக்கும் சிகிச்சை விளைவுகள் மற்றும் சிகிச்சை பராமரிப்பின் ஒட்டுமொத்த தரம் ஆகிய இரு அம்சங்களிலும் புதிய தர அளவுகோல்களை நிறுவும் திறனையும், பேரார்வத்தையும் நாங்கள் கொண்டிருக்கிறோம்." என்று கூறினார். எம்ஜிஎம் ஹெல்த்கேர் - ன் தலைமை செயலாக்க அதிகாரி திரு. ஹரீஷ் மணியன் ஆற்றிய உரையில், "புதிய தரஅளவுகோல்களை உருவாக்குவதும், தொடர்ந்து மறுபுத்தாக்கத்தை மேற்கொள்வதும் எம்ஜிஎம் - ல் எங்களது முடிவுக்கு வராத தீவிர முயற்சியாக இருந்து வருகிறது. புற்றுநோய்க்கு எதிரான போர், நோயாளிகளுக்கும் மற்றும் சிகிச்சையளிக்கும் மருத்துவர்களுக்கும் ஒரு எளிதான பணியல்ல என்பதை நாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறோம். புற்றுநோய் சிறப்பு நிபுணர்களுக்கும் கூடுதலாக, உணர்வுரீதியிலான ஆதரவையும், ஊட்டச்சத்திற்கான வழிகாட்டலையும் மற்றும் நோய் தீவிரம் / வலி தணிப்புக்கான சேவையையும் வழங்குவதற்கான சிறப்பு நிபுணர்களும் எமது பிரத்யேக சிகிச்சை குழுவில் இடம்பெற்றுள்ளனர். எமது நோயாளிகளின் ஆரோக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்ய பொறுப்பான மனப்பாங்கை வெளிப்படுத்துகின்ற ஒரு நிலைப்புத்தன்மையுள்ள சிகிச்சை முறையியலின் மீது நாங்கள் ஆழமான நம்பிக்கை கொண்டிருக்கிறோம். எம்ஜிஎம் - ன் மைய குறிக்கோளிலும் மற்றும் நாங்கள் செயலாற்றும் வழிமுறையிலும் இந்த நன்னெறி கோட்பாடு இடம் பெற்றிருக்கிறது. எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட் - ல் இன்று தொடங்கப்பட்டிருக்கும்

இந்த இரு பிரிவுகளும், இந்த நம்பிக்கையின் வெளிப்பாடாகவே இருக்கின்றன." புற்றுநோய்க்கு விரிவான, கனிவான மற்றும் மிக நவீன சிகிச்சை பராமரிப்பை வழங்குவதில் தொடர்ந்து முன்னணி வகிக்கும் நிலையை தொடரும் எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட்டிற்கு இந்த இரு புதிய பிரிவுகளின் தொடக்கம், பெருமிதமும், மனநிறைவும் அளிக்கும் தருணமாக இருக்கிறது. புற்றுநோய் சிகிச்சை மற்றும் குணம்பெறுதல் குறித்து அதிக விவரங்களை அறிய தொடர்புகொள்ளவும்: எம்ஜிஎம் கேன்சர் இன்ஸ்டிடியூட் : +91 44 4200 4200 அல்லது info@mgmcancerinstitute.in

## "டைகர்-3-ல் சல்மான் மற்றும் என்னுடைய மோதலை மக்கள் கொண்டாடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!" - இம்ரான் ஹாஷ்மி



சென்னை 18 நவம்பர் 2023: யஷ் ராஜ் ஃபிலிம்ஸின் மிகப் பிரம்மாண்டமான தயாரிப்பான டைகர்-3 இல் இம்ரான் ஹாஷ்மி

தனது வில்லத்தனமான திருப்புமுனை ஏற்படுத்தும் நடிப்பின் மூலம் ஒவ்வொரு காட்சியிலும் நாட்டின் மிகப்பெரிய அதிரடி சூப்பர் ஸ்டார் சல்மான் கானுடன் நேருக்கு நேர் மோதும் போதும் அனைவரையும் கவர்ந்திருக்கிறார்.

யஷ் ராஜ் ஃபிலிம்ஸின் டைகர்-3 பிரமிக்க வைக்கும் அளவில் வெறும் 4 நாட்களில் உலகளவில் 169.75 கோடி நிகர வசூலையும் 272 கோடி மொத்த வசூலையும் பதிவு செய்துள்ளது, மேலும் மற்றொரு பெரிய வார இறுதி வசூலை வெள்ளிக்கிழமை முதல்

பதிவு செய்ய உள்ளது! தன் மீதும் டைகர்-3-ன் மீதும் மக்கள் பொழியும் அன்பால் சிலிர்த்துப் போயிருக்கிறார் இம்ரான்!

இம்ரான் கூறும்போது, "டைகர்-3-ன் படத்திற்கு கிடைத்த வரவேற்பையும், எனது நடிப்பின் மீது மக்கள் எந்த அளவிற்கு அன்பை பொழிந்திருக்கிறார்கள் என்பதையும் கண்டு நான் சிலிர்த்துப் போயிருக்கிறேன். நாங்கள் ஒரு நல்ல நோக்கத்தோடு படத்தை தொடங்கினோம், மேலும் படம் உலகளவில் ரசிகர்களை மகிழ்விக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆன்டி-ஹீரோவாக நடிக்கும் வாய்ப்பை நான் மிகவும் ரசித்தேன், மேலும் நம் நாட்டின் மிகப்பெரிய அதிரடி சூப்பர் ஸ்டாரான சல்மான் கானுடன் நேருக்கு நேர் மோதுவதை விட வேறேது சிறந்ததாக இருக்கும்! எங்கள் மோதலை மக்கள் ரசித்து மகிழ்ந்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், மேலும் அது எனக்கு சிறந்த மதிப்பீடாகும்".

அவர் மேலும் கூறுகையில், "நான் எப்போதுமே நான் தேர்வு செய்யும் திரைப்படங்களின் மூலம் மக்களை மகிழ்விக்க விரும்புவேன் மற்றும் ஒரு எதிர்மறையான கதாபாத்திரத்திம் நான் இதுவரை முயற்சி செய்யாத விஷயங்களை முயற்சிக்க சுதந்திரம் அளித்தது. எனது வில்லத்தனமான திருப்புமுனை கதாபாத்திரத்திரத்தை ரசித்ததற்காகவும், டைகர்-3 படத்தை பாக்ஸ் ஆபிஸில் வெற்றிப் படமாக மாற்றியதற்காகவும் மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதித்யா சோப்ரா தயாரிப்பில் மணீஷ் ஷர்மா இயக்கத்தில் உருவான டைகர்-3 இந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.



**சென்னை 18 நவம்பர் 2023: செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தலைமை தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பாக, தமிழகத்தில் இரண்டாவது இடமாக பல்லாவரம் தொகுதி மும்மூர்த்தி நகர் 5-வது தெருவில் மாணவ, மாணவிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புத்தகம் படிக்கும் திறனை மேம்படுத்தவும், பொது அறிவு சிந்தனை வளர்க்கும் விதமாக தளபதி விஜய் நூலகம் திட்டத்தினை அகில இந்திய பொதுச் செயலாளர் புஸ்ஸி.என்.ஆனந்து துவக்கி வைத்தார்.!**

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர்கள், அணித் தலைவர்கள், பகுதி, வட்டம், கிளை மற்றும் மக்கள் இயக்க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.**

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

சனிக்கிழமை,
நவம்பர் 18, 2023

# கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் ஸ்டோன்பெஞ்ச் பிலிம்ஸ் கார்த்திகேயன் சந்தானம் மற்றும் ஃபைவ் ஸ்டார் கிரியேஷன்ஸ் எஸ் கதிரேசன் தயாரிப்பில் வெளியாகி சூப்பர் டூப்பர் ஹிட் அடித்திருக்கும் 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' குழுவின் நன்றி தெரிவிப்பு விழா

சென்னை 18 நவம்பர் 2023: கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில், ஸ்டோன்பெஞ்ச் பிலிம்ஸ் கார்த்திகேயன் சந்தானம் தயாரிப்பில், ரெட் ஜெயின்ட் மூவீஸ் வெளியீட்டில் ராகவா லாரன்ஸ் மற்றும் எஸ் ஜே சூர்யா உள்ளிட்டோர் நடிப்பில் தீபாவளியை முன்னிட்டு நவம்பர் 10 அன்று வெளியாகி சூப்பர் டூப்பர் ஹிட் அடித்திருக்கும் 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' திரைப்படத்தின் இணை தயாரிப்பாளர்கள் கல்ராமன் எஸ் சோமசேகர், கல்யாண் சுப்பிரமணியம் மற்றும் அலங்கார் பாண்டியன் ஆவர். இப்படத்தின் நன்றி தெரிவிப்பு விழா சென்னையில் வெள்ளிக்கிழமை (நவம்பர் 17) நடைபெற்றது. நிகழ்ச்சியின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

சட்டானி பாத்திரத்தில் நடித்த விது பேசியதாவது...

வந்திருக்கும் அனைவருக்கும் நன்றி. பத்திரிகையாளர் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி. வாழ்த்து சொன்ன அனைவருக்கும் நன்றி. சீனியர்களுடன் நடித்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. லாரன்ஸ் சார் மற்றும் எஸ் ஜே சூர்யா அவர்களுடன் நடித்ததில் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். எடிட்டர் ஷபிக் முகமது அலி பேசியதாவது...

அனைவருக்கும் நன்றி. ஸ்டோன் பெஞ்ச் குடும்பத்தை சேர்ந்தவன் நான். கார்த்திக் சுப்புராஜ் சாரால் தான் நான் இன்றைக்கு இந்த இடத்தில இருக்கிறேன். பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் நன்றி, நீங்கள் இந்தப்படத்தை பத்தி பேசியிருக்கவில்லை என்றால் நான் இங்க பேச முடிந்திருக்காது.

நடிகர் நவீன் சந்திரா பேசியதாவது...

பத்திரிகையாளர் நண்பர்களுக்கும் இந்த வெற்றியை கொடுத்த ஸ்டோன் பெஞ்ச் பிலிம்ஸ் நிறுவனத்திற்கும் மிகப்பெரிய நன்றி. எனக்கே என்னுடைய கேரக்டர் மீது வெறுப்பு வரும் அளவிற்கு கதை இருந்தது. எஸ் ஜே சூர்யா சார் மற்றும் லாரன்ஸ் சாருடன் நடித்தது மறக்க முடியாத அனுபவம். இந்த பாத்திரத்தை எனக்கு கொடுத்த கார்த்திக் சுப்புராஜ் சாருக்கு மிக்க நன்றி. 'ஜிகர்தண்டா' திரைப்படம் பார்த்தவுடன் கார்த்திக் சுப்புராஜ் சார் திரைப்படத்தில் ஒரு சீன் மட்டுமாவது நடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன், இந்த திரைப்படத்தில் மிகப்பெரிய கதாபாத்திரம் கொடுத்ததற்கு மிகவும் நன்றி. இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் பேசியதாவது...

திரையுலகில் எந்த மாதிரி படம் செய்ய வேண்டும் என்று தொழில்நுட்ப கலைஞர்கள் இடையில் விவாதம் இருந்து கொண்டே இருக்கும், நாம் ஆசைப்பட்டு செய்ய வந்த படங்கள் சில சமயங்களில் தான் கிடைக்கும், அந்த மாதிரி படம் மக்களுக்கும் பிடித்திருப்பது மகிழ்ச்சி. கார்த்திக் சுப்பராஜ் மாதிரியான இயக்குநர் தொடர்ந்து ஒரே விஷயத்தை செய்யாமல், அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்லும் சினிமாவை செய்வார்கள் அவருடன் நானும் இருப்பது மகிழ்ச்சி. எங்கள் டீமில் இந்தப்படத்தின் இசைக்காக நிறைய உழைத்தோம். கார்த்திக் படம் மீண்டும் தியேட்டரில் எப்போது வரும் என காத்திருந்தோம். இந்தப்படத்தை இப்போது தியேட்டரில் மக்கள் கொண்டாடுவது மகிழ்ச்சி. படத்திற்கு நீங்கள் தந்த ஆதரவுக்கு நன்றி.

தயாரிப்பாளர் கார்த்திகேயன் சந்தானம் பேசியதாவது...

இங்கு வந்திருக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு நன்றி. பத்திரிகையாளர் காட்சியிலேயே இப்படத்திற்கு நீங்கள் மனதார பாராட்டு தெரிவித்தீர்கள். 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' திரைப்படத்தை பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டேன். இந்த திரைப்படம் வெற்றிப்படமாக அமைந்ததற்கு அனைவருக்கும் நன்றி. ஸ்டோன்பெஞ்ச் பயணத்தில் இது ஒரு முக்கிய மைல்கல். இந்த திரைப்படத்தை பொறுத்தவரை நான் பேசுவதற்கு நிறைய இருக்கிறது. ரெட் ஜெயின்ட்டுக்கு மிக்க நன்றி. கார்த்திக் சுப்பராஜ் அவர்களுக்கு மிகவும் நன்றி. மக்களிடம் இந்த திரைப்படம் மிகப்பரிய அளவில் சென்றடைந்துள்ளது, அனைவரும் ரசிக்கிறார்கள். இந்த திரைப்படத்திற்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி. நடிகர் மற்றும் இயக்குநர் எஸ் ஜே சூர்யா பேசியதாவது...

வெற்றியை பகிர வேண்டிய நேரம் இது. பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கு நன்றி. மதுரை, திருச்சி, கோவை உள்ளிட்ட ஊர்களுக்கு சென்று தியேட்டர் ரெஸ்பான்ஸ் எப்படி இருக்கிறது என்று பார்த்தோம். ரசிப்புத் தன்மை தற்போது முன்பை விட மிகவும் அதிகமாகி உள்ளது. ஒரு நகைச்சுவை காட்சிக்கு கைத்தட்டல் வரலாம், ஆனால் உணர்ச்சிப்பூர்வமான காட்சிகளுக்கு வரும் போது ரொம்ப ரொம்ப சந்தோஷமாக உள்ளது. இப்படத்தை வெளியிட்ட ரெட் ஜெயின்ட் நிறுவனத்திற்கு மிக்க நன்றி. "நம்ம பேசக்கூடாது, நம்ம படம் பேசனும்" என்று கார்த்திக் சுப்பராஜ் சொல்வார். அதே மாதிரி இந்த படம் பேசுகிறது. லாரன்ஸ் அவர்கள் எனது மிகப்பெரிய நண்பர், நல்ல மனிதர், நல்ல பெயரை அவர் சம்பாதித்திருக்கிறார். தயாரிப்பாளர் கார்த்திகேயன் சந்தானம் அவர்களின் குழுவினர் அனைவருக்கும் நன்றி. இந்த திரைப்படத்தில் எல்லாமே நன்றாக அமைந்தது. அனைவருக்கும் பிடித்த மாதிரி அமைந்திருக்கிறது. நல்ல கதையை இயக்குநர் திரையில் காட்டியிருக்கிறார். நடிகர் ராகவா லாரன்ஸ் பேசியதாவது...

பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் நன்றி. இந்த படம் எனக்கு பெரிய வெற்றியை கொடுத்திருக்கிறது. என் உள் மனது சொன்ன மாதிரி இந்த படத்தின் நாயகன் கார்த்திக் சுப்புராஜ் தான். இந்த படத்திற்கு கடவுளின் ஆசிர்வாதம் நிறைய உள்ளது. சட்டானி கதாபாத்திரத்தில் நடித்த விதுவிற்கு மிகப்பெரிய பாராட்டுகள். ரெட் ஜெயின்ட் நிறுவனத்திற்கு மிகவும் நன்றி. நிறைய பேர் இந்த படத்தை பாராட்டி உள்ளனர். என்னுடைய குரு சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் சார் அவர்கள் வாழ்த்தியதற்கு மிகவும் நன்றி. ராகவேந்திரா சுவாமியை நேரில் பார்த்ததில்லை, ரஜினிகாந்த் அவர்களை என்னுடைய ராகவேந்திரா சுவாமியாக நினைக்கிறேன். என் ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி. என் அம்மா பெயரில் ஒரு பெரிய கல்யாண மண்டபம் கட்டப் போகிறேன். அதற்கு உங்கள் வாழ்த்துகள் தேவை. நன்றி. இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் பேசியதாவது...

அனைவருக்கும் வணக்கம், இந்த திரைப்படத்தின் மீது எனக்கு பெரிய நம்பிக்கை இருந்தது, அதே சமயம் பதட்டமும் இருந்தது. உங்கள் அனைவரின் ஆதரவோடும் இன்று 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' மாபெரும் வெற்றி பெற்றிருப்பது மிக்க மகிழ்ச்சி. இந்த படத்தை திரையரங்கில் பார்த்த அனைவருக்கும் நன்றி. படத்தின் தலைப்பை வழங்கிய ஃபைவ் ஸ்டார் கிரியேஷன்ஸ் திரு கதிரேசன் அவர்களுக்கு நன்றி. இதில் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி. ஸ்டோன் பெஞ்ச் பிலிம்ஸ் கார்த்திகேயன் சந்தானம் அவர்களுக்கு நன்றி. லாரன்ஸ், எஸ் ஜே சூர்யா, நிமிஷா சிறப்பாக நடித்திருந்தனர். சட்டானி கதாபாத்திரம் அவ்வளவு சுலபம் இல்லை. அந்த வேடத்தில் நடித்த விது மிகவும் கஷ்டப்பட்டு நடித்தார். இந்த படத்திற்கு கடவுளின் ஆசிர்வாதம் நிறைய இருக்கிறது. நிறைய விஷயங்கள் நடந்தன. இதன் காட்சிகளை நாங்கள் செதுக்கவில்லை, எல்லாம் கடவுளின் அருளால் தானாக அமைந்தது. ஒன்றரை வருடத்திற்கு முன்னால் இந்த கதையை பற்றி பேசிக்கொண்டு இருந்தோம், இன்று இது திரையில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்த நடிகர் தனுஷ், இயக்குநர்கள் ஷங்கர், நெல்சன், மாரி செல்வராஜ் உள்ளிட்ட பலருக்கு நன்றி. என்னுடைய தலைவர் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் என்னை பாராட்டி உள்ளார். 'பீட்சா' மற்றும் 'மெர்குரி' படங்களுக்கு பாராட்டிய ஒரே நபர் தலைவர் மட்டும் தான். நன்றி தலைவா. மாபெரும் ஆதரவளித்துள்ள பத்திரிகையாளர்களுக்கு நன்றி.



# "லேபிள் எனக்கு அடையாளம் தரும்.. -நடிகர் அரிஷ் குமார் நம்பிக்கை "போலீஸ் கேரக்டர் என் திரையுலக பயணத்திலும் மேஜிக்கை ஏற்படுத்தும்" ; 'லேபிள்' வெப் சீரிஸை ஆவலுடன் எதிர்பார்க்கும் அரிஷ் குமார்

சென்னை 18 நவம்பர் 2023: தமிழ் சினிமாவில் நடிகர்கள் ராஜ்கிரண், மீனா, வடிவேலு என புகழ்பெற்ற பல நட்சத்திரங்களை அறிமுகப்படுத்திய இயக்குநர் கஸ்தூரி ராஜாவின் இயக்கத்தில் 'இது காதல் வரும் பருவம்' படத்தில் கதாநாயகனாக அறிமுகமானவர் அரிஷ் குமார். தனது படத்திற்காக இவரைத் தேர்ந்தெடுத்த பின்னர் தான், அரிஷ் குமார் திரையுலகில் கிட்டத்தட்ட 300 படங்களுக்கு மேல் பணியாற்றிய பிரபல படத்தொகுப்பாளர் கணேஷ்குமாரின் மகன் என்பதே கஸ்தூரி ராஜாவுக்குத் தெரிய வந்தது. அந்த அளவிற்கு தந்தையின் பெயரைக் கூட தனது சிபாரிசுக்காக பயன்படுத்திக்கொள்ள விரும்பாமல் தனது திறமையை மட்டுமே முன்னிறுத்தி ஒரு நடிகராக கடந்த 18 வருடங்களுக்கு மேலாக தனது திரையுலக பயணத்தை தொடர்ந்து வருகிறார் அரிஷ் குமார்.

மாத்தியோசி, கோரிப்பளையம், முத்துக்கு முத்தாக, மிக மிக அவசரம் என முத்தான படங்களை தேர்ந்தெடுத்து நடித்தாலும் நட்பையும் அறிமுகத்தையும் பயன்படுத்தி வாய்ப்பு பெற விரும்பாததாலோ என்னவோ இடையிடையே இவரது நடிப்பு பயணத்தில் அவ்வப்போது சிறிய தேக்கம் ஏற்பட்டது. தற்போது இயக்குநர் அருண்ராஜா காமராஜ் இயக்கத்தில், ஜெய், தான்யா ஹோப், மாஸ்டர் மகேந்திரன் உள்ளிட்ட பலர் நடிப்பில் நவம்பர் 10 ஆம் தேதி வெளியாகி இருக்கும் 'லேபிள்' என்கிற வெப்சீரிஸில் மிக முக்கியமான கதாபாத்திரம் ஒன்றில் நடித்துள்ளார் அரிஷ் குமார்.

'லேபிள்' வெப் சீரிஸ் குறித்தும் அடுத்தடுத்து தான் நடிக்கும் படங்கள் குறித்தும் சுவாரசியமான தகவல்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டார் அரிஷ் குமார்.

"எத்தனையோ ரீமேக் படங்கள் வந்து போகின்றன. எல்லாமே தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை, ஆனால் அருண்ராஜா காமராஜ் இயக்கத்தில் 'நெஞ்சுக்கு நீதி' படம் ஹிந்தி ரீமேக்காக வெளியானாலும் கூட அதில் நம் சமூக நீதிக்கான விஷயங்களை அழுத்தமாக பேசி இருந்தார் அருண்ராஜா. அவரது எழுத்துக்கள் எனக்கு ரொம்பவே பிடிக்கும். அந்த படம் பார்த்துவிட்டு உடனடியாக அவரைத் தொடர்பு கொண்டு எனது வாழ்த்துகளை தெரிவித்தேன். அப்படியே அவரது இயக்கத்தில் நடிக்க விரும்பும் எனது ஆசையையும் வெளிப்படுத்தினேன். பெரும்பாலும் நான் இதுபோன்று நட்பை பயன்படுத்தி வாய்ப்புகள் தேட விரும்புவதில்லை. ஆனால் சிலரது படங்களில் நடிக்க வேண்டும் என்கிற எண்ணம் இயல்பாகவே ஏற்படும் தானே..??! அப்படித்தான் அருண்ராஜா காமராஜிடம் எனது விருப்பத்தைக் கூறினேன். அவரும் அதை மறவாமல் மனதில் வைத்து, தான் இயக்கும் 'லேபிள்' வெப் சீரிஸில் ஒரு முக்கியமான கதாபாத்திரம் ஒன்றை எனக்கு கொடுத்தார்.

வெப் சீரிஸ் என்கிறபோது அதில் இடம்பெறும் அனைத்து கதாபாத்திரங்களுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த வெப் சீரிஸில் ஒரு போலீஸ் அதிகாரி கதாபாத்திரத்தில் நடித்துள்ளேன். 'லேபிள்' என்றால் ஒரு அடையாளம்.. ஒரு பிராண்ட்.. அந்த வகையில் இந்த லேபிள் மூலம் நான் ஒரு அடையாளத்தை உருவாக்கிக் கொள்வேன். இதுவரை வெளிவந்த வெப் சீரிஸ்களில் இருந்து சற்று வித்தியாசமாக அதே சமயம் ஹை குவாலிட்டி ஆக இது உருவாகி உள்ளது. இதை வெப் சீரிஸ் என்று சொன்னாலும் இதை ஒரு திரைப்படமாகத்தான் பார்க்கிறார்கள். மிகப்பெரிய ஆக்சன் காட்சிகளுடன், பாடல்களும் இதில் இருக்கிறது.



பெரும்பாலும் பல பேர் சினிமா மீதான மோகத்தில் தான் இங்கே வருகிறார்கள். ஆனால் சில பேர் மட்டும் சினிமாவிற்குள் வந்து ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே வருவார்கள். அப்படி ஒரு இயக்குநர் தான் அருண்ராஜா காமராஜ். சமூக நீதியை தெளிவாக பேசக் கூடிய ஒரு இயக்குநராகத்தான் அவரை நான் பார்க்கிறேன். இந்த லேபிளிலும் மிகப்பெரிய ஒரு விஷயத்தைப் பேசி இருக்கிறார். இதுதான் நான் நடித்துள்ள முதல் வெப் சீரிஸ். சினிமா, வெப் சீரிஸ் இரண்டுக்குமே நடிப்பில் எந்த வித்தியாசமும் இல்லை. ஒரே மாதிரியான உழைப்பைத் தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. இரண்டும் வெளியாகும் தளங்கள் வெவ்வேறு என்றாலும், வெப் சீரிஸ் ரசிகர்களின் மனதில் நீண்ட நாள் நிலைத்து நிற்கும். இரண்டு மணி நேர படத்தில் ஒரு ரசிகனை பல சமயங்களில் கன்வின்ஸ் செய்வது இயலாத காரியம். ஆனால் ஒரு வெப் சீரிஸ் ஏதோவொரு இடத்தில் ரசிகனை திருப்திப்படுத்தி விடும். அதுதான் இந்த இரண்டுக்கும் இருக்கும் வித்தியாசமாக நான் பார்க்கிறேன். ஆனால் ஒரு திரைப்படத்தில் நடித்த அனுபவம் தான் இதில் எனக்கு கிடைத்தது. இனி வேறு வெப் சீரிஸ்களின் நடிக்கும்போது தான் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா எனப் பார்க்க முடியும்..

கிட்டத்தட்ட ஆறு வருடங்களுக்கு பிறகு மீண்டும் நடிக்க துவங்கியிருக்கிறேன். முன்பெல்லாம் வருடத்திற்கு ஒரு விதமான சினிமா ட்ரெண்டிங்கில் இருக்கும். இப்போதெல்லாம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ட்ரெண்ட் மாறிக்கொண்டே இருக்கிறது. ரசிகர்களின் டேஸ்ட் மாறிக்கொண்டே இருக்கிறது. இதில் எந்த ட்ரெண்டிங்கில் நாம் படம் பண்ணப் போகிறோம் என்பதற்குள் அடுத்து புதிய ட்ரெண்டிங் வந்துவிடுகிறது. இப்படி ஆறு வருடம் கழித்து உள்ளே வரும்போது எல்லாமே கொஞ்சம் புதிதாக மாறி இருந்தது. இந்த இடைவெளி கூட எனது தவறினால் நிகழ்ந்தது தான்.. இப்போது அருண்ராஜாவிடம் வாய்ப்பு கேட்டது போல எனது நட்பு வட்டத்தில் இருப்பவர்களை அணுகி வாய்ப்பு கேட்டு என்னை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்று இருக்க வேண்டும். அதை உணர்வதற்கு கொஞ்சம் காலம் அதிகமாகவே ஆகிவிட்டது. நாம் தட்டும் எல்லா கதவும் நமக்காக திறக்கப்படும் என்று சொல்ல முடியாது. ஆனால் ஏதோ ஒரு கதவு திறக்கும்.. தட்டுவதை மட்டும் நாம் நிறுத்தக்கூடாது என்பதை புரிந்து கொண்டேன்.

இந்த வெப் சீரிஸை வெறும் 70 நாட்களில் எடுத்து விட்டார் அருண்ராஜா காமராஜ். ஒரு திரைப்படத்திற்கு ஆகும் நாட்களை விட இது குறைவுதான். ஆனால் இதை வெப் சீரிஸ் ஆக பார்க்கும்போது இவ்வளவு குறுகிய நாட்களில் எடுத்தது போன்றே தெரியாது. அந்த அளவிற்கு அருண்ராஜா காமராஜின் கடின உழைப்பு இதில் இருக்கிறது. ஆனாலும் அவர் படப்பிடிப்புத் தளத்தில் டென்ஷன் ஆவதோ அலட்டிக் கொள்வதோ கிடையாது. ஒரு இளைஞனை ஒரு வெற்றி ஓரிடத்தில் நிறுத்தி வைக்கும்போது அவனுக்குள் இருக்கும் ஒரு கோபம், பதற்றம் இருக்கும்.., நம்ம கரெக்டா இருக்கணும் என்ற ஒரு எமோஷன் இருக்கும் இல்லையா.. அதெல்லாம் எதுவுமே அருண்ராஜாவிடம் கிடையாது. இது ஆக்சன் படம் என்றாலும் அவ்வளவு ஜாலியாக படப்பிடிப்பை நடத்தினார். அதேபோல ஒளிப்பதிவாளர் தினேஷ் கிருஷ்ணன் வெகு திறமையாக காட்சிகளைப் படமாக்கினார். வெப் சீரிஸ் என்றாலே இசையமைப்பாளர் சாம் சி.எஸ் தான் என்று சொல்லும் அளவிற்கு தனது மிரட்டலான பின்னணி இசையால் தாங்கிப் பிடித்து வருகிறார். நம் தமிழ் சினிமாவில் நமக்கு கிடைத்த மிகச்சிறந்த பின்னணி இசை அமைப்பாளர் சாம் சி.எஸ் என்பதில் சந்தேகமே இல்லை.

'லேபிள்' வெப் சீரிஸைத் தொடர்ந்து 'கண்ணதாசன்' என்கிற படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறேன். இந்த படத்திலும் எனக்கு போலீஸ் அதிகாரி கதாபாத்திரம்தான். கதையும் வித்தியாசமான ஒன்றுதான். சுகன் குமார் என்பவர் இந்த படத்தை இயக்குகிறார். யாரிடமும் உதவியாளராக இல்லாமலேயே இயக்குநராக மாறியவர் இவர்.

லேபிள் வெப் சீரிஸில் போலீஸ் கதாபாத்திரத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே கண்ணதாசன் படத்தில் போலீஸ் அதிகாரி கதாபாத்திரம் என வந்து கதை சொன்னார்கள். எனக்கே அது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இரண்டிற்குமே நடிப்பிலும் தோற்றத்திலும் வித்தியாசம் காட்டி இருக்கிறேன்.

பொதுவாகவே ஒரு நடிகருக்கு போலீஸ் படங்கள் அவரை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்திச் செல்லும் என்பார்கள்.. நாமும் நிறைய பார்த்திருக்கிறோம். என்னுடைய திரையுலக பயணத்திலும் அந்த மேஜிக் நடக்கும் என எதிர்பார்க்கிறேன்.

கண்ணதாசன் படத்தை தொடர்ந்து இன்னொரு வெப் சீரிஸிலும் நடிக்கிறேன். அதற்கான படப்பிடிப்பும் துவங்கி விட்டது. சினிமாவில் ஒன்று ஜெயிக்கும், ஒன்று தோற்கும், ஒன்று வாழவைக்கும் என்று சொல்வார்கள்.. ஒன்றே ஒன்று இதையெல்லாம் செய்துவிடும் என நம்பி இருந்ததால் தான் இந்த இடைவெளியும் தாமதமும் ஏற்பட்டது. இனி கதைக்காக காத்திருப்பது, நல்ல படத்திற்காக காத்திருப்பது என்பதைத் தாண்டி கிடைக்கிற வாய்ப்பில் எப்படி கோல் அடிப்பது என்பதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன். தொலைத்த இடத்தில் தான் தேட முடியும் என்பார்கள். நான் தொலைக்கவில்லை.. தொலைந்து விட்டேன். இப்போது நானே என்னைத் தேடிக் கண்டுபிடித்து இருக்கிறேன். அந்த விஷயத்தை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க நினைக்கிறேன்.

நான் நடித்த "மிக மிக அவசரம்" திரைப்படம் வெளியாகி நான்கு ஆண்டுகளைத் தொட்டுள்ளது. ஒரு இயக்குநராக சுரேஷ் காமாட்சி நல்ல கருத்து கொண்ட அற்புதமான ஒரு படத்தைக் கொடுத்திருந்தார்.. அவரது டைரக்சனில் மீண்டும் நடிக்கும் வாய்ப்புக்காக காத்திருக்கிறேன். சுரேஷ் காமாட்சி அண்ணன் போல ஒருவர் நமக்கு துணையாக இருப்பது சினிமாவில் மிகப்பெரிய பலம்" என்கிறார்.

## தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தில் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை: ஐகோர்ட்டில் அரசு அறிக்கை தாக்கல்

சென்னை, 18 நவம்பர் 2023: தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தில் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஐகோர்ட்டில் தமிழ்நாடு அரசு அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த 2018-ம் ஆண்டு மே 22-ந்தேதி பொதுமக்கள் நடத்திய போராட்டத்தின்போது, போலீஸ் துப்பாக்கி சூடு நடத்தினர். இதில், 13 பேர் பரிதாபமாக இறந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது. பின்னர், தமிழ்நாடு அரசு அளித்த விளக்கத்தை ஏற்று, அந்த வழக்கை முடித்து வைத்து விட்டது. இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில், மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை நீதிபதிகள் ஜெ.நிஷாபானு, என்.மாலா ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்ச் விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை கமிஷன் அளித்த அறிக்கையின்படி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? என்று தமிழ்நாடு அரசுக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ஜெ.நிஷா பானு, என்.மாலா ஆகியோர் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு தரப்பில் அதிகாரிகளுக்குள் அனுப்பப்பட்ட கடிதங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில், உள்துறை கூடுதல் செயலாளருக்கு, தமிழ்நாடு டி.ஜி.பி., சங்கர் ஜிவால் கடந்த 9-ந்தேதி எழுதிய கடிதத்தில், நீதிபதி அருணா ஜெகதீசன் கமிஷன் அறிக்கையின்படி, எந்த போலீசார் மீதும் குற்ற வழக்கு (எப்.ஐ.ஆர்.) பதிவு செய்யப்படவில்லை. குற்ற நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை'' என்று கூறியுள்ளார்.

பின்னர், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நீதிபதி அருணா ஜெதீசன் அறிக்கையின் அடிப்படையில், சம்பவம் நடந்தபோது, தூத்துக்குடி கலெக்டராக இருந்த என்.வெங்கடேசுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து 2022-ம் ஆண்டு அக்டோபர் 25-ந்தேதி நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

அவர் குற்றச்சாட்டை மறுத்து கடந்த மார்ச் 23-ந்தேதி விளக்க கடிதம் அனுப்பியுள்ளார். எனவே, இவருக்கு எதிராக துறை ரீதியான விசாரணை நடத்த மூத்த ஐ.ஏ.எஸ்., அதிகாரி தீரஜ்குமார் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல, அப்போதைய தென்மண்டல ஐ.ஜி., சைலேஷ்குமார் யாதவ், டி.ஐ.ஜி., கபில் குமார் சி.சரத்கர், தூத்துக்குடி போலீஸ் சூப்பிரண்டு பி.மகேந்திரன், துணை போலீஸ் சூப்பிரண்டு லிங்கத்திருமாறன், இன்ஸ்பெக்டர்கள் என்.ஹரிகரன், டி.பார்த்திபன் ஆகியோருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அவர்கள் விளக்கம் அளித்துள்ளனர். அந்த விளக்கம் டி.ஜி.பி., பரிசீலனையில் உள்ளது.

இன்ஸ்பெக்டர் திருமலை மீது சி.பி.ஐ., வழக்குப்பதிவு செய்துள்ளதால், இவர், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். சப்-இன்ஸ்பெக்டர்கள் சொர்ணமணி, ரென்னிஸ், போலீஸ்காரர்கள் ராஜா, தாண்டவமூர்த்தி, மதிவாணன், கண்ணன், எம்.சங்கர், சதீஷ்குமார், ஏ.சுடலைக்கண்ணு, தாசில்தார்கள் சேகர், கண்ணன், சந்திரன் ஆகியோருக்கு எதிராக துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

இதை படித்து பார்த்த நீதிபதிகள், இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. பதிவு செய்துள்ள வழக்கின் தற்போதைய நிலை என்ன? ஒரு இன்ஸ்பெக்டருக்கு எதிராக மட்டும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? அப்படியென்றால் மற்ற அதிகாரிகளுக்கு எதிரான குற்ற வழக்கு கைவிடப்பட்டதா?

குற்றச்சாட்டுக்குள்ளான அதிகாரிகள் பணியில் தொடருகின்றனரா? அல்லது ஓய்வு பெற்று விட்டார்களா? இந்த அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் என்ன? துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் இவர்களின் பங்கு என்ன? என்று சரமாரியாக நீதிபதிகள் கேள்வி கேட்டனர்.

பின்னர், இந்த கேள்விகளுக்கு எல்லாம் அடுத்த விசாரணையின்போது விளக்கம் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டனர். விசாரணையை டிசம்பர் 11-ந்தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## செய்யாறு சிப்காட் எதிர்ப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்ட விவசாயிகள் மீதான குண்டர் தடுப்பு சட்டத்தை ரத்து செய்து முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை, 18 நவம்பர் 2023: செய்யாறு சிப்காட் எதிர்ப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்ட விவசாயிகள் மீதான குண்டர் தடுப்பு சட்டத்தை ரத்து செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டு உள்ளார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில் முதல்கட்டமாக 645 ஹெக்டேர் பரப்பளவில் சிப்காட் தொழிற்பூங்கா தொடங்கப்பட்டது. தற்போது, இதில் 13 நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 27 ஆயிரத்து 432 பேர் நேரடியாகவும், 75 ஆயிரம் பேர் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

இதே பகுதியில் 2-ம் கட்டமாக 2 ஆயிரத்து 300 ஹெக்டேர் பரப்பில் சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்பட்டது. தற்போது, இதில் 55 நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 31 ஆயிரத்து 645 பேர் நேரடியாகவும், ஒரு லட்சம் பேர் மறைமுகமாகவும் பயன்பெற்று வருகின்றனர்.

சிப்காட் தொழிற்பூங்கா வெற்றிகரமாக செயல்பட்டதன் விளைவாக சிப்காட் பகுதி - 3 தொழிற்பூங்காவை அமைக்க செய்யாறு வட்டத்தில், மேல்மா மற்றும் அதனை சுற்றியுள்ள 8 கிராமங்களில் உள்ள 3 ஆயிரத்து 174 ஏக்கர் அளவிற்கு நில எடுப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில், 7 ஏக்கர் மட்டுமே நஞ்சை நிலமாகும்.

தற்போது ஆயிரத்து 200 ஏக்கர் அளவிற்கு நில எடுப்பிற்கான அறிவிப்பு மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. இதில் நஞ்சை நிலம் ஏதுமில்லை. நில எடுப்பு செய்ய உத்தேசித்துள்ள ஆயிரத்து 881 நில உரிமையாளர்களில் 239 பேர் மட்டுமே ஆட்சேபணை மனுக்களை அளித்துள்ளனர்.

இந்த நிலையில் மேல்மா கிராமத்தில் உள்ள பட்டா நிலத்தில் தேத்துறை கிராமத்தை சேர்ந்த மேல்மா சிப்காட் விவசாயிகள் எதிர்ப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பச்சையப்பன் என்பவர் தலைமையில், தென்னங்கீற்று கொட்டகை அமைத்து 2.7.2023 அன்று முதல் தினசரி சுமார் 15 முதல் 20 நபர்களை கொண்டு தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்தி வந்தனர்.

அரசு அதிகாரிகளை பணி செய்யவிடாமல் தடுத்தது, அடிக்கடி சாலை மறியலில் ஈடுபட்டு பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தது, நில எடுப்பு செய்ய தாமாக முன்வந்து சம்மதம் தெரிவித்த பொதுமக்களைத் தடுத்து நிறுத்தியது, பணி செய்த காவலர்களை தாக்கியது, பொது உடைமைகளை சேதப்படுத்தியது உள்ளிட்ட பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டதன் காரணமாக, கடந்த 4-ந்தேதி மேல்மா சிப்காட் விவசாயிகள் எதிர்ப்பு இயக்க நிர்வாகியான கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அருள் மற்றும் 19 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதில் ஏற்கனவே அதிக வழக்குகளில் தொடர்புடைய அருள் மற்றும் 6 பேரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க திருவண்ணாமலை கலெக்டர் உத்தரவிட்டார்.

குண்டர் சட்டத்தின் கீழ் கைதான பச்சையப்பன், தேவன், சோழன், திருமால், மாசிலாமணி, பாக்கியராஜ் ஆகியோரின் குடும்பத்தினர் செய்யாறு சட்டமன்ற உறுப்பினருடன் பொதுப்பணித்துறை அமைச்சரை நேரில் சந்தித்து, மேற்படி நபர்களை விடுவிக்க கோரிக்கை வைத்தனர்.

இவர்கள் அளித்த மனுக்களில், வரும் காலங்களில் இது போன்று அரசு திட்டங்களை காரணமில்லாமல் எதிர்க்க மாட்டோம் என்றும், இத்தகைய தவறுகளை வெளியாட்களின் தூண்டுதலின் பேரில் செய்துவிட்டோம் என்றும், இனி வரும் காலங்களில் இதுபோன்ற தவறுகளை செய்யமாட்டோம் எனவும் தெரிவித்து தங்கள் குடும்ப உறுப்பினர்களை விடுவிக்க கோரி இருந்தனர்.

கோரிக்கை கனிவுடன் பரிசீலனை

பொதுப்பணித்துறை அமைச்சர், இந்த கோரிக்கையை முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் செய்யாறு சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு, சட்டம் - ஒழுங்கிற்கு குந்தகம் விளைவித்து, பொது சொத்திற்கு சேதம் விளைவித்ததன் காரணமாக, குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பச்சையப்பன் உள்ளிட்ட 6 பேரின் குடும்பத்தினரின் கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்து, அவர்களை குண்டர் தடுப்பு சட்ட நடவடிக்கையில் இருந்து விடுவிக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

அதன்படி, பச்சையப்பன் உள்ளிட்ட 6 பேர் மீது திருவண்ணாமலை கலெக்டர் பிறப்பித்த குண்டர் தடுப்பு சட்ட நடவடிக்கை விலக்கி கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஹோண்டா இந்தியா பவர் புராடக்ட்ஸ் கவர்ச்சிகரமான வாடிக்கையாளர் நன்மை திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது; பண்டிகை காலங்களில் கீறல் மற்றும் வெற்றியுடன் இலவச பரிசுகளை வழங்குகிறது

சென்னை, 18 நவம்பர் 2023: ஹோண்டா இந்தியா பவர் புராடக்ட்ஸ் லிமிடெட், இந்தியாவின் முன்னணி மற்றும் சிறந்த-இன்-கிளாஸ் பவர் தயாரிப்பு தயாரிப்பாளரும், மற்றும் 38 வருட காலக்கட்டத்தில் பவர் புராடக்ட்ஸ் பிரிவில் சந்தையில் முன்னணியில் உள்ளவருமான 'ஐ வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறது. ஹோண்டா ஃபெஸ்டிவ் தமாகா', பிமிறிறி இன் நிரூபிக்கப்பட்ட விவசாயப் பொருட்களில் குறிப்பாக வாட்டர் பம்ப், டில்லர்கள், பிரஷ் கட்டர், என்ஜின்கள் ஆகியவற்றில் வசீகரிக்கும் பண்டிகை ஆஃபர்கள். இந்த பிரச்சாரத்தின் துவக்கத்தின் மூலம், நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு முதல் பிராண்ட் என்ற நிலைப்பாட்டை வலுப்படுத்துகிறது மற்றும் பண்டிகை கால சலுகைகளுக்கு உத்வேகம் சேர்க்கும் வகையில் அதன் விரிவான அளவிலான விவசாய தயாரிப்புகளுக்கு இணையற்ற நன்மைகள் மற்றும் வெகுமதிகளை வழங்குகிறது.

இந்த பிரத்தியேக சில்லறை முயற்சியின் மூலம், வாடிக்கையாளர்கள் விரிவான விவசாய மற்றும் கட்டுமான இலாகாக்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தயாரிப்புகளுடன் இலவச பரிசுகளை வெல்லும் வாய்ப்பைப் பெறுவார்கள். பண்டிகைக் காலத்தை இன்னும் உற்சாகப்படுத்த, நிறுவனம் ஸ்கிராட்ச் கார்டுகளை வழங்கி வாடிக்கையாளர்களுக்கு மற்றொரு தமாக்கா பரிசை வெல்லும் வாய்ப்பை வழங்குகிறது, இது ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்/எல்இடி டிவி/ ஸ்மார்ட்வாட்ச்களாக இருக்கலாம். இந்த முயற்சி 15 அக்டோபர் 2023 முதல் நவம்பர் 30, 2023 வரை செல்லுபடியாகும். இந்த பிரச்சாரம் பான் இந்தியாவில் செயலில் இருக்கும் மற்றும் நாட்டின் நீளம் மற்றும் அகலம் முழுவதும் விவசாயம் மற்றும் கட்டுமான சமூகங்கள் மற்றும் பிற விண்ணப்பதாரர்களுக்கு உதவும்.

ஹோண்டா ஃபெஸ்டிவ் தமாகா திட்டங்களின் விவரங்கள்:




- வாட்டர் பம்ப்: வாடிக்கையாளர்கள் எல்இடி டார்ச்/ டஃபிள் பேக்கை இலவசப் பரிசாகப் பெறுவார்கள், மேலும் ஒரு ஸ்கிராட்ச் கார்டும் மற்றொரு அற்புதமான பரிசை வெல்லும் வாய்ப்பைப் பெறுவார்கள்.
- பிரஷ் கட்டர்கள்: ஒரு பரிசுடன் (டஃபிள் பேக்) வாடிக்கையாளர்கள் மற்றொரு அற்புதமான பரிசை வெல்லும் வாய்ப்பைப் பெறுவார்கள்.
- டில்லர்: டில்லர் மூலம், நுகர்வோர் பரிசு (புளூடூத் ஸ்பீக்கர்) மற்றும் ஸ்கிராட்ச் கார்டை வெல்வார்கள்.
- ஜெனரல் பர்ப்பஸ் இன்ஜின்: ஜி பி ஈ உடன், வாடிக்கையாளர்களுக்கு இலவச பரிசாக எல் ஈ டி டார்ச் மற்றும் மற்றொரு அற்புதமான பரிசை வெல்லும் வாய்ப்பாக ஸ்கிராட்ச் கார்டு வழங்கப்படும்.

தனது வாடிக்கையாளர்களுக்கு பண்டிகைக் காலத்தில் இந்த விதிவிலக்கான சில்லறைத் திட்டத்தை வழங்குவதற்கு உற்சாகமாக உள்ளது மற்றும் அதன் புரவலர்களின் பண்டிகைக் கொண்டாட்டத்திற்கு மற்றொரு வீரியத்தை சேர்க்கிறது. இந்த முன்முயற்சிகள் எச் ஐ பி பி இன் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகிறது, ஏனெனில் இது வாடிக்கையாளர் திருப்தியை முன்னணியில் வைத்திருக்கிறது மற்றும் புதுமைகளை வளர்ப்பதற்கு பரந்த அளவிலான தொழில்நுட்பங்களை வழங்கும் ஒரு பிராண்டாக தன்னை நிலைநிறுத்துகிறது. விவசாயம், கட்டுமானம் மற்றும் பல்வேறு பயன்பாடுகளுக்கான அதன் இயந்திரங்களால் ஆதரிக்கப்படும் இந்தியாவின் விவசாயத் துறையின் வளர்ந்து வரும் தேவைகளுக்காக விரிவான அளவிலான விவசாயப் பொருட்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இலவச பரிசுகள் மற்றும் ஸ்கிராட்ச் அண்ட் வின் கிஃப்ட்களை வெல்வதற்கான வாய்ப்பை எச் ஐ பி பி இன் டீலர் அவுட்லெட்டுகளில் அல்லது ஆன்லைன் சேனல்கள் வழியாக பரந்த அளவிலான விவசாய தயாரிப்புகளில் பெறலாம். எச் ஐ பி பி இன் அர்ப்பணிப்பு நிபுணர்கள் குழு வாடிக்கையாளர்களுக்கு தயாரிப்பு விவரக்குறிப்புகள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு அவர்களின் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கு உதவும். வாடிக்கையாளர்கள் ஹோண்டாவின் கட்டணமில்லா எண்ணை 1800-11-2323க்கு அழைக்கலாம், சலுகை தொடர்பான எந்த விசாரணைக்கும் அல்லது வரையறுக்கப்பட்ட கால சலுகையைப் பெற, அருகிலுள்ள ஹோண்டா டீலர்ஷிப்பைப் பார்வையிடவும்.

ஹோண்டா இந்தியா பவர் தயாரிப்புகள் வரம்பைப் பற்றிய கூடுதல் தகவல்களை www.hondaindiapower.com மற்றும் முகநூல் பக்கம் /hondapowerproductsindia இல் காணலாம்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# கல்லீரல் புற்றுநோயை தோற்கடித்திருக்கும் 11 மாதமே ஆன குழந்தை: எம்ஜிஎம் ஹெல்த்கேரில் புதுமையான கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சை




சென்னை 18 நவம்பர் 2023: சென்னை மாநகரின் மையப் பகுதியில் பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் உயர் சிகிச்சையை வழங்குவதில் புகழ்பெற்றிருக்கும் எம்ஜிஎம் ஹெல்த்கேர் ஒரிசாவைச் சேர்ந்த 11 மாதமே ஆன குறைந்த உடல் எடை கொண்ட ஒரு குழந்தையின் உயிரை காப்பாற்றும் வகையில் உயிருள்ள தானமளிப்பவரிடமிருந்து பெறப்பட்ட கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சையை வெற்றிகரமாக செய்திருப்பதை அறிவிப்பதில் பெருமைகொள்கிறது. சராசரி உடல் எடைக்கும் குறைவான இக்குழந்தைக்கு கல்லீரல் புற்றுநோய் (ஹெபடோபிளாஸ்டோமா) இருந்தது. அத்துடன் பெக்வித்-வீடமேன் சிண்ட்ரோம் என அழைக்கப்படும் ஒரு அரிய மரபியல் பிறவி கோளாறாலும் இக்குழந்தை அவதிப்பட்டு வந்தது. ஒரு அரிதான கல்லீரல் புற்றுநோயான ஹெபடோபிளாஸ்டோமா பாதிப்போடு 2023 ஜூலை மாதத்தில் எம்ஜிஎம் ஹெல்த்கேரில் இக்குழந்தை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டது. பிற மருத்துவமனைகளில் கீமோதெரபியின் எட்டு சுழற்சி சிகிச்சைகளை அதற்கு முன்பு பெற்றிருந்த நிலையில், இக்குழந்தையின் பெற்றோர்கள் எம்ஜிஎம் ஹெல்த்கேரில் இக்குழந்தையின் பிரச்சனைக்கு தீர்வு காணும் நோக்கத்தோடு இங்கு குழந்தையை அழைத்து வந்திருந்தனர். எம்ஜிஎம் ஹெல்த்கேரின் கல்லீரல் நோய்கள், உறுப்புமாற்று மற்றும் ஹெச்பிபீ அறுவைசிகிச்சை துறையின் இயக்குநர் டாக்டர். தியாகராஜன் □□ரீனிவாசன் மற்றும் இதன் இயக்குநர் டாக்டர். கார்த்திக் மதிவாணன் ஆகியோர் மேற்கொண்ட பரிசோதனைகளில், மிகை வளர்ச்சியோடு தொடர்புடைய ஒரு அரிதான மரபியல் கோளாறான பெக்வித்-வீடமேன் சிண்ட்ரோம் என்ற கூடுதல் பாதிப்பும் மற்றும் புற்றுக்கட்டிகளுக்கு அதிகரித்த இடர்வாய்ப்பும் இருப்பது கண்டறியப்பட்டது. பிறக்கும் 10,500 முதல் 13,700 பச்சிளங்குழந்தைகளில் ஒரு குழந்தையிடம் இந்த மரபியல் கோளாறு காணப்படுகிறது; இந்த நோய்க்குறி, ஒரு தனித்துவமான மருத்துவ சவாலை முன்வைக்கிறது. புற்றுக்கட்டியை அறுவைசிகிச்சையின் மூலம் அகற்றும் வாய்ப்பை எம்ஜிஎம் மருத்துவக்குழு மிகக்கவனமாக மதிப்பாய்வு செய்தது; ஆனால் கல்லீரலின் மையப் பகுதியில் இக்கட்டி அமைந்திருந்தது, கல்லீரல் உறுப்பை சேதப்படுத்தாமல் அதை அகற்றுவதை பாதுகாப்பற்றதாக ஆக்கியிருந்தது. எனவே இதைத் தொடர்ந்து உயிருள்ள தானமளிப்பவரிடமிருந்து பெறப்படும் கல்லீரலைக் கொண்டு கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சையை மேற்கொள்ளும் முடிவு எடுக்கப்பட்டது. டாக்டர். தியாகராஜன் □□ரீனிவாசன் தலைமையிலான, மருத்துவர்களது குழு ஸ்வாப் கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு இக்குழந்தைக்கு மறுவாழ்வை தந்திருக்கிறது.

இச்சிகிச்சையில் இருந்த சிக்கல்கள் குறித்து டாக்டர். தியாகராஜன் ஸ்ரீனிவாசன் பேசுகையில், “பொருத்தமான இரத்த உறவுள்ள உயிருள்ள தானமளிப்பவரிடமிருந்து கல்லீரல் பெற இயலாமை மற்றும் உடல் மெலிவுச் சீர்கேடு மற்றும் தொற்று போன்ற கீமோதெரபிக்கு பிந்தைய சிக்கல்கள் உட்பட பல்வேறு சவால்களை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த கடுமையான சவால்களை வெற்றிகரமாக சமாளிப்பதற்கு ஊட்டச்சத்து ஆதரவு மற்றும் தொற்றுக்கான சிகிச்சை வழியாக இக்குழந்தை நோயாளியை அறுவைசிகிச்சைக்கு உரிய உடற்தகுதியுள்ளதாக ஆக்க வேண்டியிருந்தது. அதன்பிறகே உயிருள்ள தானமளிப்பவரிடமிருந்து பெறப்பட்ட கல்லீரலைக் கொண்டு உறுப்புமாற்று சிகிச்சையை நாங்கள் வெற்றிகரமான மேற்கொண்டோம்,” என்று கூறினார்.

“தானமளிப்பவரிடமிருந்து பெறப்பட்ட கல்லீரல், இந்த சிறுவயது குழந்தைக்கு பொருத்தமற்று மிகப்பெரியதாக இருந்தது; எனவே இக்கல்லீரலின் இயக்கத்திறனை அப்படியே தக்கவைத்து அதன் அளவை குறைப்பதற்கு சிறப்பு உத்திகளை நாங்கள் பயன்படுத்தினோம்; அதன்பிறகு அளவு குறைக்கப்பட்ட கல்லீரலை இக்குழந்தைக்கு வெற்றிகரமாக நாங்கள் பொருத்தினோம். தானமாக பெறப்பட்ட கல்லீரலின் உடற்கூறை, அறுவைசிகிச்சைக்கு முந்தைய 3டி கணினி வழிமுறையிலான மறுகட்டமைப்பாலும் மற்றும் கல்லீரலை அகற்றுவதற்கான மெய்நிகர் முறை திட்டமிடலாலும் இது சாத்தியமானது. கல்லீரல் உறுப்பு மாற்று சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டதால் இக்குழந்தை இப்போது வழக்கமான கல்லீரல் செயல்பாடுகளுடனும், நல்ல உடல்நலத்துடன் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது. அதன் பிறகு எடுக்கப்பட்ட இமேஜிங் சோதனைகளில் எந்த புற்றுக்கட்டிகளும் தென்படவில்லை,” என்று டாக்டர். தியாகராஜன் ஸ்ரீனிவாசன் மேலும் கூறினார்.

எம்ஜிஎம் ஹெல்த்கேரின் கல்லீரல் நோய்கள், உறுப்புமாற்று மற்றும் ஹெச்பிபீ அறுவைசிகிச்சை துறையின் இணை இயக்குநர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர். கார்த்திக் மதிவாணன் கூறியதாவது; “இக்குழந்தை குறைவான உடல் எடையுடன் கையாள்வதற்கு மிகவும் மெல்லியதாக இருந்ததால் இந்த அறுவைசிகிச்சை, ஒரு மிகப்பெரிய சவாலாக எங்களுக்கு இருந்தது. இக்குழந்தையின் பாதிக்கப்பட்ட கல்லீரலை அகற்றி தானமாக பெறப்பட்ட கல்லீரலை மாற்றுப்பதியம் செய்யும் சிகிச்சைக்கு மொத்தத்தில் 12 மணி நேரங்கள் எடுத்தது. இக்குழந்தையின் உறவினர்கள் மத்தியில் பொருத்தமான கல்லீரலை தானமாக பெற இயலாத காரணத்தால் ஸ்வாப் கல்லீரல் உத்தியை பயன்படுத்துவதை நாங்கள் தேர்வு செய்தோம். எனவே, சென்னையை சேர்ந்த 42 வயதான நபரிடமிருந்து கல்லீரலை நாங்கள் தானமாக பெற்றோம்.”

“குழந்தைகள் வயது பிரிவில் இந்த வகையான கல்லீரல் நோய்கள் பற்றிய விழிப்புணர்வு குறைவாகவே மக்களிடம் இருக்கிறது. சிக்கலற்ற நேர்வுகளில் கீமொதெரபி மற்றும் கல்லீரலில் பாதிக்கப்பட்ட பகுதியை வெட்டி அகற்றலாம். இதுபோன்ற சிக்கலான நேர்வுகளில் உயிர்காக்கும் விருப்பத்தேர்வாக கல்லீரல் உறுப்புமாற்று சிகிச்சை பொதுவாக பரிசீலிக்கப்படுவதில்லை. இத்தகைய சிகிச்சைக்கு குழந்தைநல மருத்துவர், தீவிர சிகிச்சை மருத்துவர், புற்றுநோயியல் மருத்துவர், உறுப்புமாற்று அறுவைசிகிச்சை நிபுணர் மற்றும் கல்லீரலியல் சிறப்பு நிபுணர் ஆகியோருடன் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த அணுகுமுறை எப்போதும் தேவைப்படுகிறது. உறுப்புமாற்று புற்றுநோயியல் சிகிச்சை பிரிவு வளர்ச்சியடைந்து இருப்பதன் காரணமாக நோய் முற்றிய நிலையிலுள்ள நோயாளிகளையும் குணப்படுத்த முடியும்; இத்தகைய புற்றுநோயை குணப்படுத்தி பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உயிரை பாதுகாக்க சிறப்பு திறன் கொண்ட கல்லீரல் சிகிச்சை மருத்துவமனைகளை தொடக்க நிலையிலேயே அணுகுவது முக்கியம்” என்று டாக்டர். கார்த்திக் விளக்கமளித்தார்.

எம்ஜிஎம் ஹெல்த்கேர் - ன் குழும தலைமை செயல் அதிகாரி திரு. ஹரிஷ் மணியன் கூறியதாவது; “குழந்தையின் சிறிய உடலுக்கு சரியாக பொருந்துவதை உறுதிசெய்ய தானமாக பெற்ற கல்லீரலின் அளவை குறைப்பது உட்பட அதிக சிக்கலான இந்த அறுவைசிகிச்சையின் மூலம் ஒரு வயதிற்கு உட்பட்ட இக்குழந்தையின் உயிரை காப்பாற்றியிருப்பதில் எமது மருத்துவர்கள் மிகச்சிறப்பான சாதனையை நிகழ்த்தியிருக்கின்றனர். எம்ஜிஎம் ஹெல்த்கேர் - ல் எமது நோயாளிகளின் நலவாழ்வு எப்போதும் மிக முக்கிய முன்னுரிமையாக இருந்து வருகிறது. இந்த சிகிச்சை நேர்வில், இக்குழந்தைக்கு மறுவாழ்வை வழங்கும் அற்புதமான வாய்ப்பு எங்களுக்கு கிடைத்ததில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இந்த அறுவை சிகிச்சையின் வெற்றி, எமது ஒட்டுமொத்த மருத்துவர் குழுவின் திறன் மற்றும் அர்ப்பணிப்பையும் மற்றும் தானமளித்த நபரின் தாராள குணத்தையும் வலுவாகக் கோடிட்டு காட்டுகிறது. இக்குழந்தைக்கும் மற்றும் அதன் குடும்பத்தினருக்கும் எமது சிறப்பான வாழ்த்துகள்.”

மிக உயர்ந்த தரத்தில் மருத்துவ சிகிச்சையை வழங்குவதிலும் மற்றும் அறுவைசிகிச்சைகளை முன்னோடித்துவமாக மேற்கொள்வதிலும் இம்மருத்துவமனை கொண்டிருக்கும் தளராத பொறுப்புறுதியை இந்த வெற்றிகரமான அறுவைசிகிச்சை எடுத்துக்காட்டுகிறது. சிக்கலான கல்லீரல் அறுவைசிகிச்சைகள் மற்றும் உறுப்புமாற்று சிகிச்சைகளில் டாக்டர். சீனிவாசன், டாக்டர். கார்த்திக் மதிவாணன் மற்றும் அவர்களது குழுவினரின் நிபுணத்துவமும், அனுபவமும், எண்ணற்ற நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்க்கை மீது நேர்மறையான தாக்கத்தை தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது.

# ஐ சி சி ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை 2023 போட்டிகளின்போது அடிமட்ட கிரிக்கெட் கிளப்புகளுக்கு 2,000க்கும் மேற்பட்ட கிரிக்கெட் கிட்களை வழங்க டி பி வேர்ல்ட்ன் ‘பியாண்ட் பவுண்டரீஸ் முன்முயற்சி‘ உறுதியளிக்கிறது

சென்னை 18 நவம்பர் 2023: எண்ட்-டு-எண்ட் லாஜிஸ்டிக்ஸ் தீர்வுகள் துறையில் உலகளவில் முன்னணியில் இருக்கும் டி பி வேர்ல்ட், சமூகத்தில் உள்ள உள்ளூர் கிரிக்கெட் கிளப்புகளுக்கு மிகவும் தேவையான உயர்தரம் வாய்ந்த கிரிக்கெட் கிட்களை வழங்கும், பியாண்ட் பவுண்டரீஸ் முன்முயற்சியை இன்று சென்னையில் அறிமுகப்படுத்தியது. இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக, கிரிக்கெட் கியர்களைக் கொண்ட பெஸ்போக் கண்டெய்னரை சென்னையில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இந்திய முன்னாள் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி மற்றும் டி பி வேர்ல்ட்ன் மத்திய கிழக்கு, வட ஆப்பிரிக்கா மற்றும் இந்திய துணைக் கண்டத்திற்கான தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர் ரிஸ்வான் சூமர் ஆகியோர் வெளியிட்டனர். இந்த அறிமுகத்துடன், ஐ சி சி ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை 2023 போட்டிகளின்போது வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட 2000க்கும் மேற்பட்ட கிரிக்கெட் கிட்களில் டி பி வேர்ல்ட் ஏற்கெனவே 750 கிட்கள் வரை விநியோகம் செய்துள்ளது.



இது பியாண்ட் பவுண்டரீஸ் முன்முயற்சியில் ஒரு முக்கிய தருணத்தைக் குறிப்பதோடு மட்டுமல்லாமல், மும்பை மற்றும் அகமதாபாத்தில் முதல் இரண்டு கொள்கலன்கள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவில் இன்றுவரையிலான முழு பயணத்தையும் உள்ளடக்கியது. சென்னையில் வெளியிடப்பட்ட கன்டெய்னர், ஜெனரல்-நெக்ஸ்ட் கிரிக்கெட் நிறுவனம், லயோலா கல்லூரி மைதானத்தில் நிலைநிறுத்தப்பட்டு, ஜென்-நெக்ஸ்ட் கிரிக்கெட் அகாடமி, சூப்பர்ஸ் கிங்ஸ் அகாடமி மற்றும் சென்னை நகரில் உள்ள பிற அரசுப் பள்ளிகளின் வீரர்களுக்கு கிட்களை விநியோகிக்கும்.

ஐ சி சி ஆடவர் உலகக் கோப்பை 2023 இன் போது, டி பி வேர்ல்ட் ஒவ்வொரு 100 ரன்களுக்கும் 10 கிட்களை வழங்க உறுதியளித்துள்ளது, இதன் விளைவாக உலகெங்கிலும் உள்ள அடிமட்ட கிளப்புகளுக்கு 2,000 க்கும் மேற்பட்ட கிட்களை இந்த தாக்கமான முன்முயற்சியின் மூலம் உறுதியளிக்கிறது. பியாண்ட் பவுண்டரீஸ் மூலம் டி பி வேர்ல்ட் அதன் எண்ட்-டு-எண்ட் நெட்வொர்க் மற்றும் ஸ்மார்ட் லாஜிஸ்டிக்ஸ் திறன்களைப் பயன்படுத்தி கிரிக்கெட் கிட்கள் மற்றும் உபகரணங்களை உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் விளையாடும் சமூகங்களுக்கு குறைந்தது ஐம்பது பெஸ்போக் ஷிப்பிங் கண்டெய்னர்கள் மூலம் விநியோகிக்கும்.

இந்த கொள்கலன்கள் ஒவ்வொன்றிலும் பேட்டுகள், ஹெல்மெட்டுகள், கிளவுஸ்கள் மற்றும் பேடுகள் உட்பட்ட 250 கிட்கள் உள்ளன. கன்டெய்னர்கள் உள்ளமைக்கப்பட்ட ஸ்கோர்போர்டு மற்றும் வெயிலில் இருந்து பாதுகாப்பிற்காக நிழல் தருதல் ஆகிய இரட்டை நோக்கத்திற்கும் உதவும். இதனால், ஆர்வமுள்ள கிரிக்கெட் திறமையாளர்கள் ஓய்வெடுக்கவும், புத்துணர்ச்சி பெறவும் முடியும்.

கிரிக்கெட் வர்ணனையாளரும், முன்னாள் இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரும் மற்றும் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணியின் வீரருமான திரு.ரவி சாஸ்திரி அவர்கள்: “கிரிக்கெட்டின் பாரம்பரிய எல்லைகளைத் தாண்டிய தொலைநோக்குப் பார்வையான 'பியாண்ட் பவுண்டரீஸ்' முயற்சிக்காக டி பி வேர்ல்ட் நிறுவனத்தைப் பாராட்டுகிறேன். வளரும் திறமையாளர்களுக்கு அத்தியாவசியமான கிரிக்கெட் உபகரணங்களை தாராளமாக வழங்குவதன் மூலம், டி பி வேர்ல்ட் விளையாட்டின் அணுகலை உயர்த்தியது மட்டுமல்லாமல், அடிமட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும் தூண்டியுள்ளது. இந்த தாக்கத்தை ஏற்படுத்தும் முன்முயற்சியானது, விளையாட்டு உணர்வை வளர்ப்பதில் டி பி வேர்ல்ட்ன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது மற்றும் ஆர்வமுள்ள கிரிக்கெட் வீரர்கள் இப்போது பெரிய கனவு காணத் தேவையான கருவிகளைக் கொண்டுள்ளனர். கிரிக்கெட் வளர்ச்சிக்கான இந்த முழுமையான அணுகுமுறை, டி பி வேர்ல்ட் விளையாட்டின் மீதான அர்ப்பணிப்பு மற்றும் அடுத்த தலைமுறை கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிப்பதில் அதன் ஆழமான தாக்கத்திற்கு உண்மையான சான்றாகும்" என்று கூறினார்.

இந்த கன்டெய்னர், சென்னையின் உள்ளூர் கலைஞரான ஏ-கில்லின் படைப்பாற்றலால் வடிவமைக்கப்பட்டது மற்றும் டி பி வேர்ல்ட்ன் உலகளாவிய தூதரான சச்சின் டெண்டுல்கருக்கு மரியாதை செலுத்தும் வகையில், கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது. திறமையாக வடிவமைக்கப்பட்ட இந்த கலைப்படைப்பு உள்ளூர் கலாச்சார கூறுகளையும் புத்திசாலித்தனமாக உள்ளடக்கியது. இந்த சுவரோவியமானது டெண்டுல்கரின் விளையாட்டின் மீதான அசைக்க முடியாத அர்ப்பணிப்பைப் படம்பிடிப்பது மட்டுமல்லாமல், கிரிக்கெட்டின் கலாச்சார தாக்கத்தின் சாரத்துடன் எதிரொலிக்கும் பார்வைக்கு வசீகரிக்கும் கதையை உருவாக்கி, ஆர்வமுள்ள கிரிக்கெட் வீரர்கள் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த செல்வாக்கிற்கு மரியாதை செலுத்துகிறது.

டி பி வேர்ல்ட்டின் மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா மற்றும் இந்திய துணைக்கண்டத்திற்கான தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குனர் ரிஸ்வான் சூமர் அவர்கள், இந்த முயற்சி குறித்து தனது எண்ணங்களை வெளிப்படுத்துகையில், "கிரிக்கெட்டை அணுகும் நோக்கத்துடன், எங்கள் பியாண்ட் பவுண்டரீஸ் முன்முயற்சியை தமிழகத்தில் தொடங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்களின் பெஸ்போக் ஷிப்பிங் கொள்கலன் மூலம், இந்த கிரிக்கெட் வசதி, அத்தியாவசிய கிரிக்கெட் கியர்களை வழங்குவதிலும், பயிற்சியின் போது கிரிக்கெட் ஆர்வலர்கள் ஓய்வெடுக்கவும், புத்துயிர் பெறவும், மாநிலத்தில் ஆர்வமுள்ள கிரிக்கெட் திறமையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கும். தமிழ்நாட்டின் செயல்திட்ட இருப்பிடம், இணையற்ற இணைப்பு மற்றும் செழித்து வரும் தொழில்துறை சுற்றுச்சூழல் ஆகியவை செயல்திறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இப்பகுதியின் விரைவான வளர்ச்சியையும் தூண்டுகிறது. இந்த பிராந்தியத்தில் இந்த முயற்சியானது சமூக தொடர்புகளை ஆழமாக்குகிறது, மேலும் விளையாட்டை சாத்தியமாக்குகிறது. மேலும் மாநில மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் அளிக்கிறது” என்று கூறினார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில், டி பி வேர்ல்ட் அதன் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட உலகளாவிய வலையமைப்பை 73 நாடுகள் மற்றும் ஆறு கண்டங்களில் தொடர்ந்து பயன்படுத்தி, மீதமுள்ள 47 கொள்கலன்களை இந்த ஆண்டு போட்டியின் போது மேலும் இரண்டு உட்பட உலகெங்கிலும் உள்ள மூலோபாய இடங்களில் விநியோகிக்கும்; பிற விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

# லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் தனது முதல் லெக் நாளை ராஞ்சியில் தொடங்க உள்ளது. முனாஃப் படேல், பிரவின் தம்பே மற்றும் ஹஷிம் ஆம்லா மற்றும் ஆண்ட்ரூ லீபஸ் மற்றும் ராமன் ரஹேஜா ஆகியோர் இணைந்து லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட்டின் கோப்பையை வெளியிட்டனர்

சென்னை 18 நவம்பர் 2023: மிகவும் எதிர்பார்க்கப்பட்ட லெஜெண்ட்ஸ் லீக் கிரிக்கெட் (எல்எல்சி) சீசனை கிக்ஸ்டார்ட் செய்ய புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்களான முனாஃப் படேல், பிரவின் தம்பே மற்றும் ஹஷிம் ஆம்லா மற்றும் ஆண்ட்ரூ லீபஸ் மற்றும் ராமன் ரஹேஜா ஆகியோர் முக்கிய இடத்தைப் பிடித்ததால், கிரிக்கெட் உலகம் ஒரு மாபெரும் மறு இணைவைக் காண உள்ளது. ) சனிக்கிழமை ராஞ்சியில் உள்ள ஜே எஸ் சி ஏ ஸ்டேடியத்தில். லீக்கில் இர்பான் பதான் தலைமையிலான பில்வாரா கிங்ஸ் மற்றும் இந்தியா கேபிடல்ஸ் அணிகள் மற்ற அணிக்கு எதிராக மோதுகின்றன, இது ரசிகர்களுக்கு ஒரு ஏக்கம்



நிறைந்த பயணத்தையும், கிரிக்கெட் திறமையின் அற்புதமான காட்சியையும் உறுதியளிக்கிறது. போட்டிக்கு முன்னதாக பேசிய முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் முனாஃப் படேல், "லெஜெண்ட்ஸ் லீக் கிரிக்கெட் நாட்டின் மிகப்பெரிய லீக்களில் ஒன்றாகும். மேலும் ராஞ்சியில் லீக் தொடங்குவது பற்றி பேசும்போது, எனது கேப்டன் எம்.எஸ். தோனியின் பெயர் மட்டுமே நினைவுக்கு வருகிறது. பெவிலியனில் அவரது பெயரைக் கொண்ட ஸ்டேடியம் நிச்சயமாக நாட்டின் சிறந்த மைதானங்களில் ஒன்றாகும்.

அனுபவம் வாய்ந்த பிரச்சாரகர்கள் மற்றும் வளர்ந்து வரும் நட்சத்திரங்களின் வலிமையான கலவையை இந்தியா கேபிடல்ஸ் வழங்குகிறது. பிரவின் டாம்பே, டைனமிக் ஆஷ்லே நர்ஸ் மற்றும் அனுபவம் வாய்ந்த பிடல் எட்வர்ட்ஸ் ஆகியோரின் முன்னிலையில் அணியின் பந்துவீச்சு ஆயுதக்களஞ்சியம் பலப்படுத்தப்பட்டுள்ளது. நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் பிரவின் தாம்பே கூறுகையில், "லெஜெண்ட்ஸ் லீக் கிரிக்கெட் கிரிக்கெட் மீதான மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும் மீட்டெடுக்கும் ஒரு தளமாகும். இந்தியா கேபிடல்ஸ் திறமைகள் நிறைந்த அணியாகும், மேலும் இந்த பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன்" என்றார்.